# தாமரைப்பாக்கம் கல்வெட்டுகள்

பொறுப்பாசிரியர்
கு. தாமோதரன்
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

பதிப்பாசிரியர்கள்
முனைவர் சு. இராசகோபால்
முனைவர் ஆ. பத்மாவதி
அர. வசந்தகல்யாணி

அச்சிட்டோர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
தரமணி, சென்னை - 600 113
1999

முதற்பதிப்பு 1999—500 பிரதிகள்
வெளியீடு எண்.: 141

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
10089
LIBRARY
Date
MADRAS-25.

தாமரைப்பாக்கம் கல்வெட்டுகள்

பொறுப்பாசிரியர்
கு. தாமோதரன்

பதிப்பாசிரியர்கள்
முனைவர் சு. இராசகோபால்,
முனைவர் ஆ. பத்மாவதி
அர. வசந்தகல்யாணி

விலை : ரூ.

அச்சிட்டோர்
தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை
தரமணி, சென்னை-600 113

# முன்னுரை

திருவண்ணாமலை மாவட்டத்தில் செங்கம்-போளூர்ச் சாலையிலிருந்து 2 கி.மீ. தொலைவில் சலசலத்து ஓடும் செய்யாற்றின் தென்கரையில் அமைந்த சிற்றூர் தாமரைப்பாக்கம். குறிஞ்சியும் முல்லையுமான இப்பகுதி நிலப்பரப்பில், சிறு ஊர்த் தெய்வங்களும் நடுகற்களுமே வழிபடப்படுவது பெருவழக்காகும். ஒதுக்குப்புறமான இச்சிறு கிராமத்தில் 1000 ஆண்டு களுக்கு முன்பாகவே ஒரு சிவன்கோயில் அமைந்து, கோயில் சார்புடைய தாக ஒரு சமுதாயமும் அமைந்திருந்து இவ்வூர் சிறந்து விளங்கியமையை அறியும்போது வியப்பெழுகிறது. அன்றைய அரசியல் நிலப்பகுப்பில் இவ்வூர் ஓர் எல்லைப்பகுதியாக இருந்தமையே இவ்வூருக்கு ஒரு வரலாற்றுப் பின்னணி ஏற்பட்டதற்குக் காரணம் எனக் கொள்ளலாம்.

நல்ல சிற்பங்களும், சிதையாத கல்வெட்டுகளும் சிதைந்து போன மதிலும்உள்ள இச்சிவன்கோயில் - கல்வெட்டுகளிலும், இன்றும், அக்னீசுவரர் கோயில் என்றே பெயர் பெற்றுள்ளது. இக்கோயிலில் படியெடுக்கப் பட்டுள்ள கல்வெட்டுகளின் எண்ணிக்கை 29 ஆகும். இவற்றில் 24 கல்வெட்டுகள் சோழர் காலத்தவை. ஒன்று காடவராயன் கோப்பெருஞ் சிங்கன் காலத்தது. நான்கில் அரசர் பெயர் இல்லை. சுருங்கச் சொல்லின் இக்கல்வெட்டுகள் கி பி. 10-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரையிலான 500 ஆண்டுகளுக்குட்பட்டவை.

சோழர் கல்வெட்டுகளில் முதலாம் பராந்தக சோழனுடைய (கி.பி. 907-956) கல்வெட்டுகள் இவனது விருதுப் பெயரான 'மதுரை கொண்ட பரகேசரி' என்பதுடன் தொடங்குபவையாக எட்டு உள்ளன. 'கோப்பரகேசரி' என்று தொடங்கும் மூன்று கல்வெட்டுகளில் ஒன்றை இவனு டையதாகக் கொண்டால் இவனுடைய கல்வெட்டுகள் ஒன்பதாகும். மதுரை கொண்ட ராசகேசரி' என்று தொடங்கும் கல்வெட்டுகள் இரண்டுள்ளன. (க. எண்கள் 2, 10) பொதுவாக இவ்விருதுப்பெயர் சுந்தர சோழனுடைய தாகக் கருதப்படுகிறது. ஒன்றில் ஆட்சியாண்டு 30 என்றும் (கி.பி. 956-973) மற்றொன்றில் 32 என்றும் உள்ளது. இதுகாறும் கிடைத்த மதுரை கொண்ட ராசகேசரி கல்வெட்டுகளில் அதிகபட்ச ஆட்சியாண்டு 19தான் கிடைத் துள்ளது. இக்கல்வெட்டுகளில் கூறப்படும் ஆட்சியாண்டுகளைக் கணக் கிட்டால் முறையே கி.பி. 986, 988-ஆம் ஆண்டாகும். இவ்வாண்டுகள் முதலாம் இராசராசன் ஆட்சி செய்து கொண்டிருந்த காலமாகும். எனவே இரு கல்வெட்டுகளிலுமே ஆட்சியாண்டு தவறு எனத் தெரிகிறது. மேலும்

முதலாம் பராந்தக சோழனின் 34-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் (க.எண். 15) காணப்படும் பங்கள நாடுடைய இருமடி சோழ பிரிதி கங்கன், இக்கல்வெட்டுகளிலும் காணப்படுவதால், மதிரை கொண்ட பரகேசரி என்பதை மீண்டும் எழுதும் போது இராசகேசரி எனத் தவறுதலாக பொறித்திருக்க வேண்டும் எனக் கொள்ளலாம். இங்கு முதலாம் இராசராசனின் (கி.பி. 985-1014) கல்வெட்டு ஒன்றும் முதலாம் இராசேந்திரனின் (கி.பி. 1012-1044) கல்வெட்டுகள் இரண்டும் உள்ளன.

இதுவரை கூறப்பட்ட கல்வெட்டுகள் தனித்தனியாகப் பொறிக்கப் படாது ஒன்றின் இறுதியிலேயே தொடர்ந்து மற்றொன்று தொடங்குவதாக உள்ளன. முதலாம் பராந்தக சோழனின் கல்வெட்டு (க. எண். 12) முதலாம் இராசேந்திர சோழனின் இரு கல்வெட்டுகளின் இடையே உள்ளது குறிப் பிடத்தக்கதாகும். இப்படித் தொடர்ந்து கல்வெட்டுகள் ஒட்டுமொத்தமாகப் பொறிக்கப்பட்டிருப்பதன் வாயிலாக இக்கல்வெட்டுகள் பிற்காலத்தில் படியெடுத்துப் பொறிக்கப்பட்டவை என்பது தெளிவாகிறது. பராந்தகனின் கல்வெட்டுகளின் எழுத்தமைதியும் 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இல்லை.

முதலாம் இராசாதிராசன் (கி.பி. 1018-1054) மற்றும் இரண்டாம் இராசேந்திர சோழன் (கி பி. 1052-54) காலத்துக் கல்வெட்டுகள் தனித் தனியே வெட்டப்பட்டுள்ளன. எனவே இவர்கள் காலத்தில் கோயிலில் திருப்பணி நிகழ்ந்து அதற்கு முற்பட்ட கல்வெட்டுகள் படியெடுத்து வெட்டப் பட்டிருக்கக் கூடும் என்று கருதலாம்.

தமிழகத்தில் பல இடங்களில் கல்வெட்டுகள் படியெடுத்து வெட்டப் பட்டிருக்கின்றன. அப்படி படியெடுத்து வெட்டப்பட்ட கல்வெட்டுகளின் தொடக்கத்தில் 'இது ஒரு பழங்கல்வெட்டுப்படி' என்ற சொற்றொடர் இருக்கும். அவ்வகைச் சொற்றொடர் தாமரைப்பாக்கத்தில் காணப்பட வில்லை. தாமரைப்பாக்கம் கல்வெட்டுகள் தொடர்ந்து வெட்டப்பட்டிருப்பதும், மன்னனுடைய காலத்திற்கும் கல்வெட்டின் எழுத்தமைதியின் காலத்திற்கும் வேறுபாடுகள் இருப்பதும், இவை பிற்காலத்தில் படியெடுக்கப்பட்டவை என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. படியெடுக்கப்பட்ட காலம் கி.பி. 11ஆம் நூற்றாண்டுக்குள்ளாகவே அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஆய்வாளர்களுக்கு ஏற்படும் ஐயத்திற்கான தெளிவு கிடைக்கக்கூடும் என்பதன் பொருட்டு இந்நூலில் சில கல்வெட்டுகளின் நிழற்படங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

விருதுப்பெயருடன் உள்ள முதலாம் பராந்தகசோழனின் கல்வெட்டுகள் 16, 17, 32, 34, 39, 41 ஆகிய ஆட்சியாண்டுகளைச் சார்ந்தவை. பரகேசரி என்று கூறப்படும் கல்வெட்டு 4-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது. கல்வெட்டுகள் விளக்கிற்காக ஆடு கொடை கொடுத்ததைக் குறித்தவை. இக்கல்வெட்டுகளில் 32-ஆவது ஆண்டுக் கல்வெட்டு ஒன்று நாட்டுக் கோட்ட மன்றாடிகள் என்றோர் அமைப்பு இருந்ததையும், அவ்வமைப்பு கோயில் ஆடுகள் தவிர மிகுதி உள்ள ஆடுகளுக்கான வரியைக் கோயிலுக்கே விட்டுக் கொடுத்ததையும் சொல்கிறது. முல்லை நிலப்பகுதியின் செல்வமான கால் நடைகள், அவற்றின் மீதான வரி, இடையர்களின் சமூக அமைப்பு ஆகிய வற்றின் 10 நூற்றாண்டளவிலான நிலையை விளங்கிக் கொள்ள இச்சிறு கல்வெட்டு உதவுகிறது. இதே மன்னனின் பிற கல்வெட்டுகளில் சந்தி விளக்கு, திருவமிர்துக்காக நிலம் கொடுத்த செய்திகள் உள்ளன. மற்றொரு கல்வெட்டில் இருமுடிச்சோழ பிரிதிகங்கரையன் என்ற சிற்றரசன் குறிப்பிட்ட ஊர்களில் வரும் வரிகளை ஒழுங்கு செய்து கொடுத்த செய்தியும் சொல்லப் பட்டுள்ளது.

கல்வெட்டு எண்கள் 16 மற்றும் 18 ஆகிய இரு பரகேசரி வர்மனின் கல்வெட்டுகளிலும் பங்கள நாடுடைய பிரிதியங்கரையன் மகன் அத்திமல்ல னாகிய கன்னரதேவன் என்பவன் குறிப்பிடப்படுகிறான். இராஷ்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணன், கன்னர தேவன் என்றும் அழைக்கப்பட்டான். கி.பி. 948-ல் சோழ இளவரசன் இராசாதித்யனைத் தக்கோலம் போரில் வென்ற பின்னரே அவன் கல்வெட்டுகள் தமிழ்நாட்டில் கிடைக்கின்றன. எனவே கன்னரதேவன் என்ற பெயரைச் சூட்டிக் கொண்ட பிரதிநிதிகள் காணப்படும் கல்வெட்டுகள் கி.பி. 948-க்குப் பின்னர் உள்ள கல்வெட்டு களாகவே இருத்தல் வேண்டும். எனவே கல்வெட்டு எண்கள் 16-லும் 18-லும் குறிக்கப்பெறும் பரகேசரி, கி.பி. 948-க்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த மன்னனாகவே இருத்தல் வேண்டும்.* அந்தப் பரகேசரி உத்தம சோழ னாவான்.

இராசராசசோழனின் கல்வெட்டு விளக்கெரிக்கப் பொன் கொடுத்தது பற்றியும் (க.எண். 6) இராசேந்திரசோழனின் கல்வெட்டுகள் (க. எண். 11, 13) ஆடவல்லானுக்குத் திருவமுதுசெய்ய நிலம், நந்தவனம்செய்ய நிலம் தந்தமை பற்றியும் சொல்கின்றன.

* குடந்தை என். சேதுராமன் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள்.

முதலாம் இராசாதிராசன் கல்வெட்டுகளில் (க.எண். 8, 14) 29-ஆவது ஆண்டுக் கல்வெட்டு (கி.பி. 1047) அரச பரிவாரத்தினர் அடிமைக் காசு கேட்டுத் துன்புறுத்திய செயலையும், குடிகள் ஓடிப்போனதையும், கோயிலில் கடன் பெற்று அடிமைக்காசு செலுத்தப்பட்டதையும், பின்னாளில் கடனுக்கு ஈடாகக் கோயிலுக்கு நிலம் ஒன்றைக் கொடுத்ததையும் சொல்கிறது. எல்லைப் பகுதியில் இருந்த தாமரைப்பாக்கம் போர்க்காலங்களில் மாற்றரசு களால் தொல்லைப்பட்டதை இக்கல்வெட்டு வெளிப்படுத்துகிறது. 30-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு நான்கு திசை ஐந்நூற்றுவர் என்ற வணிகக் குழுவைச் சொல்வதோடு கவரை (தெலுங்குச் செட்டி) என்ற பெயரில் அமைந்த உணவுச்சாலை பற்றிய குறிப்பையும் தருகிறது.

இரண்டாம் இராசேந்திர சோழனின் கல்வெட்டுகள் (க.எண். 1, 26, 29) உழவர் குடியினரின் நாடு அமைப்பு முக்கியத்துவம் பெறுவதைக் காட்டு கின்றன. 5-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (க. எண். 1) சில அரசு ஆணைகளைக் காட்டி அதிகாரிகள் தவறாக வரி வசூலித்ததற்குப் பெரிய நாடு அமைப்பு தங்கள் கூட்டத்தில் தீர்மானம் வழியாக எதிர்ப்புத் தெரி வித்ததையும், நாடுவகை செய்கின்ற இராசராசபிடாரர் என்ற அதிகாரி பெரிய நாட்டின் தீர்மானத்தை ஆதரித்து நிலைநாட்டியதையும் குறிப்பிடு கிறது. 10-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு (க. எண். 26) பத்து நாடு அமைப்புகள் ஒன்று கூடி அரசிற்கு இந்த அளவு மட்டும் வரி செலுத்துவது என்று முடிவு செய்ததைத் தெரிவிக்கிறது. மற்றொரு 5-ஆவது ஆட்சி யாண்டுக் கல்வெட்டு (க. எண். 29) சித்திரமேழிப் பெரிய நாடு அமைப்பினர் குற்றவியல் வழக்கு ஒன்று தொடர்பாக அளித்த தீர்ப்பைக் குறிக்கிறது. பண்டைத் தமிழகக் குற்றவியல் வழக்குகளுக்கும் அவை தொடர்பாகச் சமூக அமைப்புகள் கூடி தங்களுக்குள்ளேயே தீர்ப்பளித்தற்கும் நல்லதோர் எடுத்துக்காட்டாக இக்கல்வெட்டு விளங்குகின்றது.

கல்வெட்டு (க.எண். 1) 'பூறுவதேசமும் கங்கையும் கிடாரமும் கொண்டருளின உடையார் ராசேந்திர சோழ தேவர்' என மன்னனைக் குறிப்பிடுகின்றது. இவ்வெற்றி முதலாம் இராசேந்திர சோழன் அடைந்த வெற்றி என்பதால் அவனது கல்வெட்டுகளே மேற்குறிப்பிட்ட மெய்க்கீர்த்தி யுடன் காணப்படும். ஆதலால் இக்கல்வெட்டும் முதல் இராசேந்திரன் காலம் எனக் கணிக்கப்பட்டுள்ளது (ARE 179/1973-74) ஆனால் அவன் காலத்துக் கல்வெட்டு அல்ல என்பதற்குச் சில காரணங்களைக் கூறலாம்.

1. இக்கல்வெட்டும் முதலாம் இராசாதிராசனின் கல்வெட்டும் (எண். 8) மட்டுமே சுவரில் உள்ளது. பிற கல்வெட்டுகள் அதிட்டானப் பகுதி களில் தொடர்ச்சியாக வெட்டப்பட்டுள்ளன. அவற்றுள் இருகல்வெட்டுகள் முதலாம் இராசேந்திர சோழன் காலக் கல்வெட்டுகள் ஆகும்.

சுவரில் காணப்படும் கல்வெட்டுகளில் உள்ள மன்னர்கள் காலத்திலேயே இக்கோயில் புதுப்பிக்கப்பட்டு பழைய கல்வெட்டுகள் மீட்டெழுதப் பட்டிருக்கிறது என்ற கருத்துக்கு, இக்கல்வெட்டை முதலாம் இராசேந்திரன் காலத்தது எனக் கொண்டால் பொருத்தமாக அமையாது.

2. இக்கல்வெட்டு பெரிய நாட்டார் நடவடிக்கையைப் பற்றிக் கூறுகிறது. பெரியநாடு என்பது சித்திரமேழி பெரிய நாடாகும். இந்த வேளாண் வணிக அமைப்பு இரண்டாம் இராசேந்திர சோழன் காலத்தில் தான் ஏற்பட்டது. முதலாம் இராசேந்திர சோழன் காலத்திய சான்றுகள் இதுவரைக் கிடைத்தில.

3. இரண்டாம் இராசேந்திர சோழன் தனது தந்தை காலத்தில் பூர்வ தேசத்தையும் கடாரத்தையும் வென்ற போரில் பங்கு பெற்றிருத்தல் வேண்டும். அதனால் தானும் அதே மெய்க்கீர்த்தியைப் பயன்படுத்தியிருக் கிறான் எனலாம்.

மூன்றாம் குலோத்துங்க சோழனின் 10-ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்த மூன்று கல்வெட்டுகள் (எண். 24, 27, 28) இப்பகுதிச் சிற்றரசன் கூத்தாடுந்தேவரான பிரிதிகங்கரையர் இறந்தபோது அவருடன் உயிரோடு மூன்று பெண்களும் புதைக்கப்பட்டதையும் (பள்ளிகொள்ளல்) அதன் காரணமாக அவர்களுக்கு வாரிசுகள் ஏற்படாது போகும் மன வருத்தத்தை (மனக்கேதம்) நீக்கும் வகையில் நிலம் (சந்தானச் சாமம்) கொடுக்கப்பட்ட செய்தியையும் சொல்பவையாகும். இக்கல்வெட்டுகள் அக் காலச் சமுதாயத்தின் இறந்தோர் பற்றிய நம்பிக்கை, பெண்கள் நிலை, அரசர்களின் செல்வாக்கு, மூடநம்பிக்கை ஆகியவற்றைக் கண்ணாடி போல் காட்டுகின்றன.

கோப்பெருஞ்சிங்கனின் 23-ஆவது ஆண்டுக் கல்வெட்டு (க. எண். 25) பெண்ணொருத்தி கோயிலின் முகப்பில், ஏறும் படிகளை அலங்கரித்த சோபான மண்டபம் கட்டுவித்ததைச் சொல்வதாகும்.

அரசனது பெயரில்லாத நான்கு கல்வெட்டுகளில், ஒரு கல்வெட்டு (க. எண். 19) கோதண்டராமர் என்ற பெயருடைய ஆதித்தன் (கி.பி. 891-906) அல்லது இராசாதித்தன் (கி.பி. 948-49) காலத்தில் இறையிலி நிலங்கள், வரிவிதிப்பு நிலங்களாக மாற்றப்பட்டிருந்ததை ஸ்ரீபலிபோகமாக மாற்றிக் கொடுத்த செய்தியைச் சொல்கிறது. இரண்டாம் கல்வெட்டு திருநாவலூர் வியாபாரி அந்தராளப்பத்தி அமைத்துத் தந்த செய்தியைச் சொல்கிறது. (க. எண். 23) மூன்றாம் கல்வெட்டு புத்தூர் வியாபாரி தந்த நிலம் பற்றிக் குறிக்கிறது. (க. எண். 21). நான்காவது கல்வெட்டு துண்டுக் கல்வெட்டாகும். இது கோயில் பூசை செய்வோரிடம் ஆடுகள் விளக்கிற்காகக் கொடுக்கப்பட்டதைச் சொல்கிறது. (க. எண் 22)

பொதுவாக அரசர் பெயர் பொறிக்கப்படாத கல்வெட்டுகள் எந்த மன்னன் காலத்தைச் சார்ந்ததோ அந்த மன்னன் காலத்துக் கல்வெட்டினை அடுத்து வெட்டப்பட்டிருக்கும். அதை வைத்தும், எழுத்தமைதியை அங்குள்ள கல்வெட்டுகளோடு ஒப்பிட்டும் யார் காலத்துக் கல்வெட்டு என்பதைக் கணித்து விட முடியும். ஆனால் இங்குள்ள கல்வெட்டுகள் அனைத்தும் மீட்டுப் படியெடுக்கப்பட்டவையாதலால் மேற்கூறியவாறு கணிக்க இயல வில்லை.

**கோயிலமைப்பும், கல்வெட்டுகளும்**

தாமரைப்பாக்கத்து அக்னீசுவரர் கோயில் கருவறை, அர்த்த மண்டபம், முன்மண்டபம் ஆகிய அமைப்புடன் கிழக்கு நோக்கி அமைந்திருக் கின்றது. முகமண்டபத்தின் தென்புறத்தில் படிக்கட்டுகள் அமைக்கப் பட்டுள்ளன. படிக்கட்டினை ஒட்டி ஒரு மேடையும் உள்ளது. அதன் வழியே தான் கோயிலின் உள்ளே செல்ல வேண்டும். கிழக்குத் திசையில் வாயில் இல்லாத போதிலும் அங்கே கொடிக் கம்பமும் நந்தியும் உள்ளன. இவ்வாறு கட்டப்பட்ட முன்மண்டபத் தெற்கு, கிழக்குப்புறக் குமுதவரிகளில் தான் இரண்டாம் இராசேந்திர சோழனின் கல்வெட்டுகள் (க. எண்: 1, 26, 29) வெட்டப்பட்டிருக்கின்றன. எனவே இவன் காலத்தில் தான் முன்மண்டபம் எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். இம்மண்டபத்தின் சுவர்களில் இரண்டாம் இராசேந்திர சோழனுக்குப் பின்னர் ஆட்சி செய்த மூன்றாம் குலோத்துங்கன், கோப்பெருஞ்சிங்கன் ஆகியோர் காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

இரண்டாம் இராசேந்திரனுக்கு முன்னர் ஆட்சி செய்த மன்னர்களின் கல்வெட்டுகள் அனைத்தும் கருவறை மற்றும் அர்த்தமண்டபங்களின் அதிட்டான வரிகளிலேயே வெட்டப்பட்டிருக்கின்றன. இவனது அண்ணன் இரண்டாம் இராசாதிராசனின் 14-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு மட்டும் தென்புறக் கருவறைச் சுவரிலிருந்து தொடங்குகிறது. எனவே பழைய கல்வெட்டுகள் அனைத்தும் இவன் காலத்தில் புதிதாக எடுக்கப்பட்ட முன்மண்டபத்தில் வெட்டாமல் மிகவும் கவனமாகக் கருவறை அர்த்த மண்டபங்களிலேயே வெட்டப்பட்டிருப்பது கவனத்திற்குரியதாக உள்ளது.

புதிய கட்டான முன்மண்டபத்தில் இரண்டாம் இராசேந்திரனது கல்வெட்டுகளும் பின்னர் ஆட்சி செய்த மன்னர்களின் கல்வெட்டுகளுமே காணப்படுகின்றன என்பதைப் பார்த்தோம். இரண்டாம் இராசேந்திரன் இந்த கல்வெட்டுகளின் எழுத்தமைதியில்தான் மீட்டு எழுதப்பட்ட பழைய கல்வெட்டுகளின் எழுத்தமைதியும் உள்ளதால் இரண்டாம் இராசேந்திரன்

அமர்ந்துள்ளான். பூதகணங்கள் மத்தளமும், கைத்தாளமும் இசைக்க நடுவே ஆடவல்லான் ஆடிக் கொண்டிருக்கிறார். இரு பூதங்களின் வயிற்றில் சிம்ம முகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு பூதகணம் தாமரை மொட்டைக் கையிலேந்தியவாறு தலைகீழாகப் படுத்திருக்கிறது. இவ்வாறு பலவிதமான தோற்றங்களுடன் பூதகண வரி மிகவும் ரசிக்கத் தக்கவாறு அமைக்கப் பட்டுள்ளது. கொடுங்கைக்கு மேலே யாளிவரி உள்ளது. விமானம் முழுவதும் சுதையால் அமைக்கப்பட்டிருக்கிறது.

### *கோயில் வளாகச் சிற்பங்கள்*

கோயில் வளாகத் திருச்சுற்றின் தென்கிழக்கில் விநாயகர் பைரவர், விஷ்ணு ஆகிய சிற்பங்களும் இரு துண்டாக உடைந்த லிங்கோத்பவர் சிற்பமும் உள்ளன, தென்புறத்தில் அழகிய வேலைப்பாட்டுடன் கூடிய எழில் வாய்ந்த திரிசூலச்சிற்பம் ஒன்று நடப்பட்டுள்ளது. வடமேற்கில் சேட்டைவின் சிற்பம் உள்ளது. இச்சிற்பங்களில் காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு எனலாம்.

### *ஓலைச்சுவடி*

இவ்வூரில் சுந்தரமூர்த்தி உடையார் என்பவரிடம் 'பூபி அஷ்டகியானம்' என்றோர் ஓலைச்சுவடி உள்ளது. இது ஒரு ஈசுலாமிய பெண்ணைப் பற்றியக் கதையாகும். இக்கோயிற் திருவிழாவில் இவ்வோலைச் சுவடி வாசிக்கப்படும். சிவன் கோயில் திருவிழாவில் இசுலாமியப் பெண்ணின் கதை வாசிக்கப்பட்டு மக்களால் ஆர்வமாகக் கேட்கப்பட்டது என்ற செய்தி முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இக்கதையைப் பாடலாக எழுதியவரும் ஒரு சைவரேயாவர். கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் முகலாய நவாப் மன்னர்கள் மதுரையை ஆட்சி செய்த காலத்தில் இக்கதை எழுதப்பட்டிருத்தல் வேண்டும். கதையில் பூபி என்ற அந்த இசுலாமியப் பெண் தன் கணவனைத் தேடி சிவன் கோயிலுக்குச் செல்கிறாள். மசூதிக்குச் செல்கிறாள். முழுச் சுவடியையும் படித்து அச்சிட்டால் சுவையானதொரு 18-ஆம் நூற்றாண்டு கதைக் கிடைக்கும். அச்சுவடியின் முதல் பாடல்

பார்புகழும் மதுரைநகர் பாண்டியராஜன் படைத்த
பேர்புகழும் பட்டாணி குலத்தில் இமாம் மனைவி பூபிஅம்
மாள் புகழைப்பாட கார் பொழியும் தச்சூர் நகரால் கருணிக்
கள் அருளுமஷ்டக்கியானமாக சீர்பெருகுங்கணபதி
பொற்பாத மலரனு தினமுஞ் சிந்தை செய்வார்

எனத் தொடங்குகிறது. முழுச் சுவடியையும் படித்து வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காலத்தில்தான் இக்கோயில் திருப்பணிக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது என்பதும் அப்போது புதிதாக முன்மண்டபமும் கட்டப்பட்டது என்பதையும் அறிந்து கொள்ள இயலுகிறது.

இக்கருத்திற்கு உறுதுணையாக அர்த்தமண்டப வடபுறச் சுவரில் அதாவது பழைய பத்தியில் இவனது 5-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு பொறிக்கப்பட்டிருப்பதைக் கூறலாம். (க. எண். 1) முன்பே எடுக்கப்பட்ட பழைய பத்திகளில் பின்னர் வந்த மன்னர்கள் கல்வெட்டுவது வழக்கமாயினும் இங்கு முன்னர் இருந்த பத்திகளை மீட்டு இவன் திருப்பணி செய்த காரணத்தினால் தனது முதல் கல்வெட்டான 5-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டை அர்த்தமண்டப வடபுறச்சுவரில் பொறித்துள்ளான். பொதுவாக இவ்விடத்தில் அக்கோயிலைச் சார்ந்த பழைய கல்வெட்டே இடம் பெற்றிருக்கும் என்பதை நாம் இங்கு நினைவு கூற வேண்டும். ஆக, இக்கோயில் திருப்பணி கி.பி. 1057-ல் முடிவடைந்து விட்டது என்று கூறலாம். தனது தமையன் முதலாம் இராசாதிராசனின் 30-ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு தென்புற கருவறைச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது.

சித்திரமேழிப் பெரியநாட்டார் என்ற வேளாண்மை சார்ந்த வணிக அமைப்புப் பற்றிய செய்திகள் இரண்டாம் இராசேந்திர சோழன் கால கல்வெட்டுகளிலேயே காணப்படுகின்றன. அவற்றுள் முக்கியத்துவம் வாய்ந்த கல்வெட்டு இவ்வூர்க் கல்வெட்டாகும். எனவே இக்கோயிலின் திருப்பணிக்குக் காரணகர்த்தாக்கள் சித்ரமேழி பெரிய நாட்டார்களே என உறுதியாகக் கூறலாம்.

***சிற்பங்கள்***

கருவறையின் தெற்கு, மேற்கு வடக்குப்புற தேவகோட்டங்களில் முறையே தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மா ஆகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. அர்த்தமண்டபத் தென்புறத் தேவகோட்டத்தில் விநாயகரும் வடபுறத் தேவகோட்டத்தில் துர்க்கையும் காணப்படுகின்றனர். சண்டிகேஸ்வரர் சன்னதி அருகே ஒரு சிவலிங்கம் உள்ளது.

இக்கோயிலில் சிற்றுருவச் சிற்பங்கள் மிக நேர்த்தியாகவும், எழிலாகவும் செதுக்கப்பட்டுள்ளன. தட்சிணாமூர்த்தியின் தேவகோட்டத்திலுள்ள மகரதோரணத்தின் நடுவே ஆடவல்லான் உருவம் காணப்படுகிறது. கொடுங்கை வரியின் கீழே குள்ளச் சிறு பூதங்கள் ஆணும் பெண்ணுமாக காணப்படுகின்றனர். இவர்கள் தாளம், மத்தளம் போன்ற இசைக் கருவிகளைக் கொட்டுகின்றனர். ஒரு பெண் குள்ளச் சிறு பூதம் அதற்கேற்ப நடனம் ஆடுகிறது. வடபக்கத்தில் பூதகணங்களுக்கிடையே நந்திதேவன்

***சமூகம்***

தாமரைப்பாக்கத்தில் ஊராட்சி அலுவலகம் உள்ளது. இவ்வூரில் மொத்தம் இரண்டு தெருக்களே உள்ளன. இவ்விரண்டு தெருக்களிலும் உடையார் என்ற வகுப்பினரே உள்ளனர். இவர்கள் அனைவரும் ஒருவருக் கொருவர் உறவினர்களாவர். தெற்குத் தெருவில் ஒரு பஜனைக் கோயில் உள்ளது. இங்கு சிவன்கோயிலைச் சேர்ந்த செப்புச் சிலைகளான சந்திர சேகர் சிலையும் சிவகாமி அம்மன் சிலையும் பாதுகாப்புக்கருதி வைக்கப் பட்டுள்ளது. இச்சிலைகள் கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக லாம். ஊருக்கு வடபுறத்தில்தான் திருத்தாமரைப்பாக்கத்து மகாதேவர் கோயில் அமைந்துள்ளது.

பதிப்பாசிரியர்கள்.

# நினைவஞ்சலி

அண்மையில் காலமான குடந்தை என். சேதுராமன் அவர்கள் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகக் கல்வெட்டு களை ஆய்வு செய்து தமிழக வரலாற்றில் இருந்த பல முரண்பாடான தகவல்களைத் தெளிவுபடுத்தியவர். இத் துறையின் கல்வெட்டாய்வு, கலை ஆய்வு ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இத்துறை வெளியிடும் கல்வெட்டுத் தொகுதிகளைப் படித்து தனது கருத்துக் களைத் தயக்கமின்றி வெளியிடுவார். அதன் காரணமாகக் கல்வெட்டுத் தொகுதிகள் அச்சிடப்படும்போது அவர் பார்வைக்கு அத்தொகுதிகள் அனுப்பப்படுவது வழக்கமாக இருந்தது.

காலமாவதற்குச் சரியாக ஒரு வாரம் முன்பாக அவர் இத்துறையின் சென்னை அலுவலகத்திற்கு வந்திருந்தார். அப்பொழுது தாமரைப்பாக்கம் கல்வெட்டுத் தொகுதி அவர் பார்வைக்குத் தரப்பட்டது. அதை அன்று இரவு முழுவது மாகப் படித்து அடுத்த நாளே தனது குறிப்புகளுடன் அலுவலகத்தில் கொண்டு வந்து கொடுத்தார். அவ்வாறு அவர் அளித்த குறிப்புகளைத் தாங்கி இந்நூல் இன்று வெளியிடப்படுகிறது. அவர் பெருவிருப்புடன் செய்த உதவியை இத்துறை நன்றியுடன் நினைவு கூர்கின்றது. அன்னாரின் மறைவு கல்வெட்டு ஆய்விற்குப் பேரிழப்பு ஆகும்.

**கு. தாமோதரன்**
இயக்குநர்


# பதிப்புரை

இத்துறையின் கல்வெட்டுப் பிரிவின் மூலம் தமிழ்நாட்டில் அமைந்துள்ள கோயில்களில் உள்ள கல்வெட்டுகள் ஊர், வட்டம், மாவட்டம் வாரியாகப் படியெடுத்து அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகின்றன. இத்துறையில் கல்வெட்டாய்வாளராக 1969-ஆம் ஆண்டு பணியில் சேர்ந்து பணியாற்றிய பொழுது கல்வெட்டு ஆய்வினை மேற்கொண்டு செங்கம் பகுதியில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பல நடுகல் கல்வெட்டுகளைப் புதிதாகக் கண்டுபிடிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அம்முறையில் 1971-ஆம் ஆண்டு செங்கம் வட்டம் கடலாடிக்கு அருகில் செய்யாற்றின் தென்கரையில் அமைந்துள்ள தாமரைப்பாக்கம் என்ற ஊரிலுள்ள அக்னீசுவமுடையார் கோயிலில் 29 தமிழ்க் கல்வெட்டுகள் முதல்முறையாக என்னால் கண்டறியப் பட்டு இத்துறையின் மூலம் படியெடுக்கப்பட்டன. அதன்பின்னர் இக் கல்வெட்டுகளின் குறிப்புகள் ஆங்கிலத்தில் மத்திய அரசு கல்வெட்டுப் பிரிவினால் வெளியிடப்பட்டது. இக்கோயிற் கல்வெட்டுகள் சோழர்கள் மற்றும் காடவராயர் காலத்தைச் சார்ந்தவையாகும். இக்கல்வெட்டுகள் மூலம் தமிழகத்தில் அன்று நிலவிய நீதி முறை, நில அளவை முறையினைப் பற்றியும், உடன்கட்டை ஏறும் பழக்கத்தைப் பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது· அதுமட்டுமல்லாமல் கோயில், ஊர்மக்களின் பல்வேறு பணிகளையும் மேற்கொண்டு வந்துள்ளது என்பதை இக்கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன.


ஏற்கனவே படிக்கப்பட்ட இக்கல்வெட்டுப் படிகளைக் கல்வெட்டாய் வாளராகப் பணிபுரியும் முனைவர் சு. இராசகோபால், முனைவர் ஆ. பத்மாவதி, திருமதி அர. வசந்தகல்யாணி ஆகிய மூவரும் மீளப்படித்த போது சில ஐயப்பாடுகள் ஏற்பட்டதன் பேரில் மீண்டும் புதிதாகப் படியெடுத்துப் படித்து அச்சாக்குவதற்கு வேண்டிய அனைத்துப் பணிகளையும் மேற்கொண்டனர். அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடன் கல்வெட்டுப் படியெடுப்பதில் உதவிய இளநிலைக் கல்வெட்டாய்வாளர் திரு மே. சீனிவாசன், கல்வெட்டு சிற்றெழுத்தர்கள் திரு. முருகேசன், திரு. மதிவாணன் ஆகியோருக்கும் கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கும் (1998-99) எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இக்கல்வெட்டுகளை இத்துறையின் அச்சுப் பிரிவில் மிகவிரைவில் அச்சாக்கித் தந்த உதவி பணி மேலாளர் திரு. செங்கல்வராயன், முதுநிலை போர்மேன் திரு. சீனிவாசன் மற்றும் அச்சுப் பிரிவு அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி-தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தமிழகக் கோயில்களில் உள்ள கல்வெட்டுகள் விரைவாக அச்சிட்டு நூலாக வெளியிடப்படல் வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார்கள். ஏற்கனவே நம் துறை தொடர் பணியாகத் தற்பொழுது நாகை மாவட்டத்திலிருந்து படியெடுத்த கல்வெட்டுகளைப் படித்து நூலாக வெளியிட்டு வந்தாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய ஆணைக் கிணங்க மிகவும் விரைவாகத் திருவண்ணாமலை, செங்கல்பட்டு மற்றுப் பிற மாவட்டங்களிலும் உள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து படித்து நூலாக வெளியிடல் வேண்டும் என்ற அடிப்படையில் தாமரைப்பாக்கம் கல்வெட்டுகள் அச்சாக்கப்பட்டு நூலாக வெளியிடப்படுகிறது. கல்வெட்டுகளை வெளியிடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இம்முயற்சியில் ஈடுபட்டுள்ள இத்துறை கல்வெட்டு மற்றும் அச்சுப்பிரிவு அலுவலர் களுக்கு என்னுடைய பாராட்டுகளையும், நன்றியினையும் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயக்குநர்



தாமரைப்பாக்கம் திரு அக்னீசுவரர் கோயில் தென்மேற்குத் தோற்றம்



தாமரைப்பாக்கம் திரு அக்னீசுவரமுடையார் கோயில்
கருவறை வடபுறச்சுவர்; இரண்டாம் ராஜேந்திர சோழனின் கல்வெட்டு
(பார்க்க கல்வெட்டு எண்: 1)

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 5 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1057 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 179/1973-74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| மன்னன் : | இரண்டாம் இராசேந்திரன் | | |

இடம் : அக்னீசுவரர் கோயில் அர்த்தமண்டப வடசுவர்

குறிப்புரை : பங்கள நாட்டில் அரசு நிலவரி ஆவணங்களில் வரிக்கீழ் தேவதானங்கள் என்று கோயில் நிலங்கள் பதிவாகியிருந்தன. ஆனால் அப்பகுதி அரசு அதிகாரிகள் அவற்றின் மீது விளைப்பாட்டம், பாட்டம் என்ற வரிகளை விதித்தனர். தேவதான நிலங்களை ஜன்மக்காணி, திருமுகக்காணி என்று திரித்தும் கூறினர். இதனால் அப்பகுதிக் கோயில்களின் வழிபாட்டுச் செலவுகள் குறைந்து வழிபாடும் தடைப்பட்டது. எனவே பங்கள நாட்டிலிருந்த சித்திரமேழி பெரியநாடு என்ற உழவர்குடி அமைப்பினர் தாமரைப்பாக்கம் கோயிலின் முன் அமைந்த இராசேந்திரசோழன் என்ற பெயருடைய பந்தலில் (காவணம்) கூடி அரசு அதிகாரிகளின் முடிவை எதிர்த்து கோயில்களில் நிகழ வேண்டிய வழிபாடுகள் நிகழ முந்தைய அரசாணையை நிலைநிறுத்தினர்.

பங்களநாடு வகை செய்கின்ற இராஜராஜபிடாரர் என்ற அதிகாரி தாமரைப்பாக்கத்தில் நிகழ்ந்த பெரியநாட்டுக் கூட்டத்திற்கு நேரடியாக வந்துள்ளார். இவர் அரசாணை என்று கூறி தடையும் விதித்துள்ளார். இவர் தடைவிதித்தது ஏற்கெனவே அதிகாரிகள் விதித்த வரி வசூலிப்பிற்கு என்று தெரிகிறது. கல்வெட்டு வாசகம் பண்டைய தமிழில் உள்ளதால் இவர் தடை செய்தது பெரியநாட்டார் எடுத்த முடிவிற்கு எதிரானது போலுமுள்ளது. எப்படியிருந்த போதிலும் பெரியநாடு என்ற அமைப்பின் கீழ் உழவர்கள் முக்கியத்துவம் பெறும் காலச்சூழலை இக்கல்வெட்டு வெளிப்படுத்துகிறது.

இக்கல்வெட்டில் குறிக்கப்படும் மன்னன் முதலாம் இராசேந்திரசோழன் என்று இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் உள்ளது. முதலாம்

இராசேந்திரன் தனது 5-ஆவது ஆட்சி ஆண்டில் கடாரவெற்றி அடையவில்லை. எனவே இக்கல்வெட்டு குறிப்பிடும் மன்னன் இரண்டாம் இராசேந்திர சோழனாவான். இதே ஆண்டறிக்கையின் முன்னுரையில் காவணம் என்பதைத் தோட்டம் என்றும் குறித்துள்ளனர். காவணம் என்பது ஒரு தற்காலிக மண்டபம் அல்லது பந்தலாகும்.

Summary : The devadana lands of the temple were registered as 'varikkil devadana' in the Revenue register of the Pangalanadu. But some levies called 'vilappattam' and 'pattam' were collected on the above lands by the local chiefs. They claimed these lands as Janmakkani and Tirumukakkani. So the lands which had been gifted to the temple could not have been served the purpose. So the royal officer named Rajarajapidaran, who administered Pangalanadu came to Tamaraippakkam, passed an order to obstruct them from the execution of the endowment, when the Chitrameli periyanadu assembled at the Tirukkavanam (pandal or hall) in the Tiruvangisvara temple. The assembly of Periya nadu accepted (or nullified?) the obstruction of Rajarajapidarar and issued the order which said that the endowments for the temple must have been maintained by themselves.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ பூறுவ தேசமும் கங்கையும் கிடாரமுங் கொண்ட அருளிந[1] உடையார் ஸ்ரீ

2. ராஜேந்த்ர சோழ தேவற்கு யாண்டு அஞ்சாவது[2] ஐயங்கொண்ட சோழமண்டலத்து பல்குன்றக்கோ

3. ட்டத்து பங்களநாட்டு வரிக்கீழ் தேவதானங்கள் இராஜநியோகங்களில் நின்று விளைபா

4. ட்டமும் பாட்டமும் கொண்டு தேவ[ர்]*கள் நிவந்தம் செல்கினவில்லை என்று திருத்தாமரைப்பா

5. க்கத்தில் திருவங்கீசுவர உடையார் ஸ்ரீகோயில் முன்பில் திருக்காவணம் ராஜேந்த்ர சோழநில் பெ

6. ரியனாடு கூடி இருக்க கூட்டத்தில் வந்து இநாடு பிடார[ஞ்]* செ[ய்]*கிற ராஜராஜ பிடாரர் இனாட்டு வரியிற் தேவ

7. தானங்கள் பாட்டங் கொள்வாரும் ஐந்மக்காணி கொள்வாரும் திருமுககாணி என்று கொள்வாரு[ம்]* திருவா

8. ணை எ[ன்]*று பெரியனாட்டுக் கூட்டத்து முன்னிந்று தடுக்கப் பெரியனாடும் இப்பரிசு வல்லபராய்

9. பாட்டங்களும் ஐந்மக்காணியும் திருமுககாணியெந்றுந் தேவதானங் களைக் கொண்டு தேவர்களுக்கு நி

10. வந்தஞ் செய்கிறின் இலையாகில் இப்பரிசு செய்யலாகாத தம்மங்கள் நிலை நிறுத்தப் போத

11. பெரியநாடே இத் தம்மங்கள் நிலைநிறுத்தத் திருத்தாமரைப்பாக்கத்து திருவங்கீச்வரம்முடையார் கோயி

12. லிற் சிலாலேகை ராஜபிடாரர் தடுத்த தடையே பெரியநாட்டோமும் திருவானையென்று தடுத்தோம் இ

13. ப்படி சிலாலேகை செய்க வென்ந இப்படி சிலாலேகை செய்வித்தேன் சித்திரமேழிநாட்டுப் பட்டனேன் இ

14. வை என்[எழு]*த்து

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY LIBRARY MADRAS-28.

1. கொண்டு அருளிந - என்று படிக்கவும்.

2. 'உ' என்று எழுதி அதன்மீது 'அ'ஞ்சாவது என்று திருத்தப்பட்டுள்ளது.

த. நா. தொ. ஆய்வுத்துறை தொடர் எண் : 2 / 1998

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 30 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 987 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 177/1973-74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | -- |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |
| மன்னன் : | சுந்தர சோழன் | | |

இடம் : அக்னீசுவரர் கோயில் அர்த்தமண்டப வடபுறப் பட்டிகை மற்றும் குமுதம்.

குறிப்புரை : பங்களநாடு உடைய இருமடிச்சோழப் பிரிதியங்கரையன் என்பான் தாமரைப் பாக்கம் இறைவனுக்குத் தாமரைப்பாக்கந்நாடு சேர்ந்த ஆலம்பள்ளி என்ற இடத்தில் 250 (வேலி) புரவு நிலங்களைத் தாரைவார்த்துக் கொடையாகக் கொடுத்துள்ளான். இந்நிலங்களின் வருவாய் கொண்டு தாமரைப்பாக்கம் கோயிலில் இரண்டு பொழுது திருவமிர்து படைக்கவும், இரண்டு நந்தா விளக்குகள் எரிக்கவும், சிறுபலி பூசையின் போது 5 பேர் வாத்தியங்கள் வாசிக்கவும், இரண்டு பிராமணர்களுக்கு உணவு வழங்கவும் வகை செய்யப் பட்டது. பிராமணர்களுக்கான உணவுக்கு ஒருவருக்கு 2 நாழிப்படி அரிசி, 4 காய்கறிகள், தயிர் 2 நாழி, நெய் 1 ஆழாக்கு, பாக்கு (வெறுங்காய்) 2, மற்றும் வெற்றிலை என்று இருவர்க்கும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

மதுரை கொண்ட இராசகேசரியாகச் சுந்தரசோழன் கருதப்படுகின்றான் ஆனால் அவன் 30 ஆண்டுகள் ஆட்சி செய்ததாக வேறு கல்வெட்டுகள் இதுகாறும் கிடைக்கவில்லை. கல்வெட்டு படியெடுக்கப்பட்டு மீண்டும் பொறிக்கப்பட்டதில் தவறு நிகழ்ந்திருக்கலாம்.

Summary : This inscription belongs to the 30th regnal year of the chola king Sundara chola, records that a chief called Irumudi chola Prithiyangaraiyan endowed 250 velis of land at the village Alampalli to the Mahadeva temple of Tamaraippakkam.

The source of income from these lands were utilised to perform two Sandhis (pujas) in this temple *i.e.* offering food twice a day, to burn two perpetual lamps, to play musical instruments by five persons during the occasion of Sribali and to feed two brahmanas in the temple.

The epithet 'Madurai konda Rajakesari' belongs to the chola king Sundara chola. But he did not have ruled more than 19 years. As it seems most of the inscriptions are reengraved there might have occured some errors.

**கல்வெட்டு :**

1. **ஸ்வஸ்திஸ்ரீ** மதுரை கொண்ட கோவிராஜகேசரி **வந்மர்க்கி** யாண்டு ௯ம தாவது பங்கள நாடுடைய இருமடி சோழப் பிரிதியங்கரைய[1]னேந் பல்குந்ற கோட்டத்து கீழ்வே[2] நாட்டுக் காந்தளூ

2. ர் கூற்றத்து புதநலப்பாடி நாட்டு தாமரைப்பாக்கத்து **மஹாதேவற்கு** இந்நாட்டுத் தாமரைப்பாக்[க]*த்தோடும் மிடைந்த[3] ஆலம்பள்ளி புரவு இருநூற்றை(ய்)ம்பதிநால் செ

3. ய்த நிவந்தம் இரண்டு ஸந்திக்கு திருவமுர்தும் திருநந்தாவிளக்கிரண்டும் சிறுபலி அஞ்சாள் கொண்டு கொட்டுவதாகவும் நித்தம்மிருவர் **ப்ராம்** மணர்க(ள்)ளால் இருநாழிப்படி

4. அரிசியும் கறிநாலும் தயிரு இருநாழியும் நெய்யாழாக்கும் **பேரால்** வெறுங்கா[யி]*ரண்டும் இலையும் பெறுவதாக இப்பரிசு **சந்த்ரரதித்யர்** ருள்ளளவும் செ[ய்]*வதாக **உதகபூர்வ**[மாக]* செ[ய்]*து குடு[த்]*து

5. செய்து தாரையட்டிக் குடுத்தேந் இருமடி சோழப் பிரிதியங்கரயநேன் இப்பரிசு தாமரைபாக்கிழார்களேய் ஆண்டு பூ[4]ண்டும் **செய்வதாகக்** காணியாக செ[ய்]*து குடுத்தேந்

6. இந்னிமந்தம் இவர்கள்ளே செய்வதாக செ[ய்]து குடுத்தேன் அதிராமன் நேன் இத்தன்மம் ரக்ஷிப்பான்நடி எ[ந்]றலை மேல்லிந இதுவிறக்குவாந் கங்கையிடை குமரியிடை எழு

7. நூற்றுக் காதமாற்றில் நடு[வு] செய்தார் பாவம் கொள்வாந் இவை தத்தப்பாடியுடையாந் எழுத்து இவை மங்கலோத்தமந் எழுத்து இவை பாம்பணைக் கிழாந் எழு[த்]*து[5]

---

1. 'ய' எழுத்து வரியின் கீழ் பொறிக்கப்பட்டுள்ளது.

2. கீழ்வேளூர் நாடு என்றிருக்கலாம்

3. 'மிசைந்த' என்றிருக்க வேண்டும்

4. ஆண்டு ஆண்டும் என்றும் இருக்கலாம்

5. இக்கல்வெட்டை முற்றுப்பெறாத கல்வெட்டு என தவறாக இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கைக் கூறுகிறது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 32 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 939 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 178/1973-74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |
| மன்னன் : | முதலாம் பராந்தகன் | | |

இடம் : அக்னீசுவரர் கோயில் அர்த்தமண்டப வடபுற ஜகதி

குறிப்புரை : தாமரைப்பாக்கத்து இறைவனது ஆடுகளை மேய்க்கும் இடையர்கள், (மன்றாடிகள்) அவர்களிடம் உள்ள இறைவனது ஆடுகள் போக அதிகமாக உள்ள ஆடுகளுக்கான வரியை (இறை) இறைவனுக்கே செலுத்த நாட்டுக் கோட்ட மன்றாடிகள் வகை செய்ததை இக்கல்வெட்டுக் குறிக்கின்றது. நாடு மற்றும்கோட்டம் அளவில் இடையர்களுக்கான ஒரு பொது அமைப்பு இருந்தமைதெரிகிறது.

Summary : This inscription belongs to the 32 regnal year of the chola king Parantaka I. It states that the shepherds who grazing the sheep of the deity of Tamaraippakkam have decided to pay the tax 'Attuk kirai' to the temple at Tamaraippakkam, excluding the sheep of the deity. The shepherds are mentioned as 'Nattukkotta manradigal.' It is learnt that a seperate body or forum of shepherds was in existence by this inscription within the limits of Nadu and Kottam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மதுரை[யு]*ம் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி வந்மர்க்கி யாண்டு ௩௰௨ ஆவது திருத்தாமரைப்பாக்கத்து மஹாதேவர்க்கு ஆடு மேய்க்
2. கும் மன்றாடிகள் தேவர்ராடு நீக்கி மிக்கவாடுக(ள்)ளில் ஆட்டுக்கிறை இத்தேவ்ர்க்கே முதலாக இடுவதாக வைத்தோம் நாட்டுக்கோட்ட மந்
3. றாடிகளோம் இவை பந்மாயேஸ்வர ரகைக்ஷ

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 32 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 939 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 161/1973 74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 4 |
| மன்னன் : | முதலாம் பராந்தகன் | | |

இடம் : அக்னீசுவரர் கோயில் கருவறை வடபுறப்பட்டிகை மற்றும் குமுதம்

குறிப்புரை : காமப்புல்லூரைச் சேர்ந்த மத்யஸ்தன் மங்கலோத்தமன் தாமரைப்பாக்கத்து இறைவனுக்குச் சந்திரன் சூரியன் உள்ளளவும் ஒரு நந்தா விளக்கு எரிய 90 ஆடுகளை தாமரைப்பாக்கத்து ஊரார் மூலம் திருக்கோயிலுடையார்கள் வசம் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது.

Summary : This record belongs to the 39th regnal year of the chola king Parantaka I. A person called Mangalottaman who had been working as Madhyastha of Kamappullur, donated ninty sheep to burn a perpetual lamp to the Mahadeva temple in presence of the residents of Tamaraippakkam to the temple authorities.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மதுரை கொண்ட கோப்பரகேசரி பந்மர்கு யாண்டு கூ உவது திருத்தாமரைப்பாக்கத்து மஹாதேவர்க்கு சந்திராதித்தர் உள்ளளவும்
2. திருநந்தா விளக்கொந்றினுக்கு காமப்புல்லூர் மத்யஸ்தந் மங்கலோத்தமந் திருத்தாமரைப்பாக்கத்து ஊ(ரா)ரார்[1] வழியும் திருக்கோயி(ல்)லு
3. டையார்கள்விடம் காட்டிக் குடுத்த சாவா மூவாப்பேராடு தொண்ணூறு இவை பந்மரயேஸ்வர ரக்ஷை[2]

---

1. 'உள்ளாரார்' என்றும் படிக்கலாம்.
2. முற்றுப்பெறாத கல்வெட்டு என இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கைக் கூறுகிறது. ஆனால் இக்கல்வெட்டு முற்றுப் பெற்றிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 39 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 946 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 162 / 1973-74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 5 |
| மன்னன் : | முதலாம் பராந்தகன் | | |

இடம் : அக்னீசுவரர்கோயில் கருவறை வடபுறக் குமுதம்.

குறிப்புரை : ஊர்க்கல்வெட்டு எண் 4-ன் இறுதி வரியை தொடர்ந்து பொறிக்கப் பட்டுள்ளது. கல்வெட்டு படியெடுக்கப்பட்டு மீண்டும் பொறிக்கப்பட்டதை இது உணர்த்துகிறது. அண்ணாநாட்டுக் களமுழாந் தொண்ணூற்றுவன் நாகத்தி என்பவர் தாமரைப்பாக்கத்து இறைவனுக்கு ஒரு நந்தா விளக் கெரிக்க 90 ஆடுகள் அளித்த செய்தி கூறப்படுகிறது.

Summary : This inscription is engraved in continuation of the last line of the inscription No : 4 and it records that an individual named Kalamulan Thonnurruvan Nagatti, donated ninty sheep to burn a perpetual lamp to the deity of Mahadeva at Tamaraippakkam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ ம[து]*ரையும் ஈழமுங் கொண்ட கோப்பர
2. கேசரி பந்மர்க்கி யாண்டு ௩௰௯ ஆவது அண்ணா ந[ா]*ட்டுக் களமுழாந்[1] தொண்ணூற்றுவந் நாகத்தியேன் திருத்தாமரைப் பாக்கத்து மஹாதேவர்க்கு சந்திராதித்தர் உள்ள[ள]*வும்
3. திருநந்தா விளக்கொன்றெரிக்க வைய்த்த சாவா மூவாப்பேராடு தொண் ணூறும் இது பந்மாயேஸ்வர ரக்ஷை.

---

1. காளம் - என இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் தவறாக படிக்கப்பட்டதுடன் அதனை ஊர் என பொருள் கொண்டுள்ளனர். களமுழாந் தொண்ணூற்றுவன் நாகத்தி' என்பதே அவர் பெயராகும். க. எண். 13-ல் 'அங்க மிழாந்' என்ற பெயரை கவனிக்கவும். மேலும் இவரை 'வெள்ளாளர்' என்றும் இவ்வாண்டறிக்கையில் கூறப் பட்டுள்ளது. 'வெள்ளாளர்' என்ற சொல்லே அக்கல்வெட்டில் இல்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 12 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 997 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 163/1973-74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 6 |
| மன்னன் : | முதலாம் இராசராசசோழன் | | |

இடம் : *அக்னீசுவரர் கோயில் கருவறை வடபுறக் குமுதம் ஜகதி*

குறிப்புரை : *கல்வெட்டு எண் 5-ன் இறுதிவரியில் தொடர்ந்து பொறிக்கப்பட்டுள்ளது. இது ஒரு பழைய கல்வெட்டின் மறுபொறிப்பாக இருக்க வேண்டும்.*

*வேசாலிப்பாடி புல்லாலி உடையான் காளிவைகுந்தன் என்பவன் தாமரைப்பாக்கம் கோயிலில் ஒரு நந்தாவிளக்கெரிக்க 12 கழஞ்சு பொன் கொடையாகக் கொடுத்துள்ளான். திருக்கோயில் உடையார்கள் அப்பொன்னைப் பெற்றுக் கொண்டு ஒரு நந்தாவிளக்கெரிக்க ஒப்புக்கொண்டதை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.*

Summary : This inscription of the chola King Rajaraja I, dated in his 5th regnal year, which is engraved in continuation of No: 5. and it records the endowment of 12 Kalanju of gold to buru two perpetual lamps in the Mahadeva temple at Tamaraippakkam by Kali Vaigunthan of Pullali in Vesalippadi. The temple officials who recevied the gift and agreed to burn the lamps. This inscription seems to be reengraved,

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலை கலமறுத்த கோவிரா

2. ஜ கே[க]*சரி பந்மர்க்கு யாண்டு பன்நிரண்டாவது பல்குன்றக் கோட்டத்து புதநலப்பாடி நாட்டு திருத்தாமரைப்பாக்கத்து மஹாதேவர்க்கு வேசாலிப்பாடி புல்லாலி

3. உடையாந் காளிவைகுந்தன் இத்தேவர்க்கு சந்திராதித்தர்ருள்ளளவும் எரிப்பதாக வைத்த பொந் பந்நிருகழஞ்சு இ[ப்]*பொந் கொண்டு ஒரு ந[ந்]***தர** விளக்கு நித்

4. தப்படியும் எரிப்பதாநோ[ம்]* இவூர் திருக்கோயில்லுடையோம் இவர்கள் வசம் பொன் குறித்தேன் காளி வைகுந்தநேன் இது **பந்மரயே**

5. ***ச்வர ரக்ஷை***

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 32 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 939 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்திடக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 164/1973-74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 7 |
| மன்னன் : | முதலாம் பராந்தகன் | | |

இடம் : அக்னீசுவரர் கோயில் கருவறை வடபுற ஜகதி

குறிப்புரை : ஊர்க் கல்வெட்டு எண் 6-ன் இறுதிவரியில் தொடர்ந்து பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் தாமரைப்பாக்கத்து இறைவனுக்கு மிலாடுநாட்டுப் பாலூர்க் கூற்றத்துப் பெருவெங்காவுடையான் என்பவன் நக்கன் ஆக்கிரமகோபன் மகன் மல்லன் நக்கனது நினைவாக ஒரு நந்தாவிளக்கெரிக்கத் தொண்ணூறு ஆடுகள் கொடையளித்த செய்தி சொல்லப்பட்டுள்ளது.

Summary : The record of Parantaka chola I, dated in his 32nd regnal year is engraued in continuation of No: 6. It records than an iudividual called Peruvengavudaiyan of Palurkkurram in Miladu, gifted ninty sheep to burn perpetual lamp in the Mahadeva templeat Tamaraip-pakkam, in memory of Mallan Nakkan son of Akkirama Gopan.

கல்வெட்டு :

1. **ஸ்வஸ்தி ஸ்ரீ** மதுரை கொண்ட கோப்பரகேசரி **பந்மர்க்கி** யாண்டு ௩௰௨ ஆவது திருத்தாமரை பாக்கத்து **ம**
2. **ஹாதேவர்க்குத்** திருநந்தா விளக்கொந்றெரிக்க மிலாட்டுப் பால்லூர்க் கூற்றத்துப் பெருவெங்காவுடையாந் இத்தேவர்க்கு வைத்த சாவாமூவா பேரா
3. டு தொண்ணூறு இவ்வாடு கொ[ண்]*டு ந[க்]*கந் ஆக்கிரமகோபந்[1] மகந் மல்லக்கநனைச்[2] சாத்தி வைய்த்த சந்திராதித்யர் உள்ளளவும் நிந்றெரிப்பதாகவும். இத்
4. திந்மம் இறக்குவாந் ஏழாநரகம் புகுவாந் [இ]து* **பந்மாயேஸ்வர ரக்ஷை**

1. இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் 'அக்கிரமகோபந்' எனத் தவறாக வெளியிடப் பட்டுள்ளது.
2. 'மல்லந் நக்கனை' என்று படிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 29 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1047 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 160, 169/1973-74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 8 |
| மன்னன் : | முதலாம் இராசாதிராசன் | | |

இடம் : அக்னீசுவரர் கோயிற் கருவறை வடபுறப் பட்டிகை, குமுதம், ஜகதி மற்றும் மேற்புற ஜகதி

குறிப்புரை : முதலாம் இராசேந்திரசோழன் காலத்தில் அரச பரிவாரத்தினர் தாமரைப் பாக்கத்து ஊராரை வதைத்து அடிமைக்காசு கேட்டபோது உழு குடிகள் ஓடிப் போய் அக்காசினைச் செலுத்த இயலாதநிலை ஏற்பட்டது. ஊரினர் கோயில் கருவூலத்திலிருந்து 30 காசு பெற்று அதைச் செலுத்தினர். கோயிலில் காசு பெற்ற ஆண்டான முதல் இராசேந்திரசோழனின் 31 வது ஆண்டு முதல் இராசாதிராசனின் 29-ஆவது ஆண்டு வரை கோயிலுக்கு முதலும் வட்டியும் செலுத்தப் படாமல் நிலுவை இருந்தது. அதற்காகத் தாமரைப்பாக்கத்து ஊரார் கோயில் இறைவனுக்கு ஒரு நிலத்தை விலையாகக் கொடுத்து நிலவிலை ஆவணம் எழுதித் தந்தனர். இதனை இக்கல்வெட்டு கூறுகிறது. கல்வெட்டில் நிலத்தின் எல்லைகளும், நிலத்திற்குண்டான வரிகளும் சொல்லப் படுகின்றன.

Summary : This inscription, belonging to the 29th regnal year of Rajadhiraja I, records the sale of 3000 Kuli of land, to the village temple by the urar of Tamaraippakkam. This sale was effected to repay the loan, the urar already obtained from the treasury during the 31st regnal year of Rajendra I. The record also reveals, the migration of the urar, who were unable to bear the torture perpetrated on them, by the authorities to collect a tax called "Adimaikkasu.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திங்க(ள்)ளோர் தரு தந்நெரிங்கல் வெண்குடைக் கீழ் நிலமகள் நிலவ மலர்மக[ள்]* புணர்ந்து செங்கோலோச்சி கருங்கலி கடிந்து தந்சிறு த[ா] தையை

2. யுந் திருத்தமையனை தாங்குறிகொள் தந்திரம் கோக்கரை நெ[ ]* சிலை வானவ(த)ந் வில்லவந் மீநவந் கங்கந் இலங்கைக்கு இறைவ ஏந ஆங்[க]

3. [வரி]ல் முடிசூட்டி மந்று பல்லூழியுட் டெந்நவர் மூவரில் மாநாபரணந் பொந் மு[டி]*யாநாப் பருமணிப் பசுந்தலை நற்தளத்தரிந்து வீர கேரளனை யானைக்கிடு

4 வித்து அசைவில் சுந்தரபாண்டியனை திசைவிடத்தேகமில் முல்[லை]* யூர்த் துரத்தி ஒல்கலில் வேணாட்டரைசைச் சேர[ா]*ணாட்டொதுக்கி மேவுபுகழ் இராமகுட மூவர் கெட முறிந்து வே

5. லை கெமு காந்தளூர்ச்சாலை கலமறு[த்]* தரு(ள்)ளி ஆஹவமல்லநு மஞ்சக் கேவுதந் (கேவுதந்) றாங்களு[ம்] படையாலாங்கவந் தேந் நையும்[1] கண்டப் பையநு [ம்]* கங்காதிரநும் (கங்காதிரநும்) வண்டமர் களிற்றொடு மடியத் திண்டிறல்

6 விருதர் விக்கியும் விசையாதித்தநும்[2] கருமுட[ற்]* சாங்கமய்யநும் முதலின[ர்]* [ச]மர பீருவொத்துடைய நிமிர் சுடர்ப் பொந்நோடயங் கரி புரவியோடும் பிடித்து தந்நாடையிற் ஜயங்கொண்டொந்நா[ர்]* கொள்

7. ளிப்பாக்கையில் ஒள்ளெரி மடுப்பித்தொரு தனித் தண்டால்ப் பொரு திரை உசத்த இலங்கைக்கிறைவநு[ம]*வந் அலங்கல் முடிதடியப்பிந்து மு[ந்]றநக் குரி தெந்றமிழ் மண்டலம் முழுவதும் இழ

8. ந்து எமுகடல் ஈழம் புக்க இலங்கேசுரநாகிய விக்கிரமபாண்டியந் றன்னையும் ஈண்டிய வகைகெடச் சி[ங்]*கள தேசமீழந் தங்களதாகி கார்தெழு பொழிலணி கன்நகுச்சியர் கோவிச்சயர்

9. . . னையும் பார்புகழ் வில்லவர் மதநராசுனையும் வெள்ஒளி சுட[ர்]* மு[டி] தடிந்து கொண்டருளி வடபுந்நந்திகோலாவதும்[3] பொருபடை நடாத்தி[தி]*னகரன் நாரணந் கணவதி வண்டார் தெரியில் மதிசூ தன[ன்]* என்றினைப் பலவரைசரை(மு)

10. முனைவயிற்றுரக்கி வம்பல[ர்]* தருபொழில் கம்பிழி நகரி[ல்]*ச் சளுக்கியர் மாளிகை தக[ர்]*ப்பித்திளக்கமில் வில்லவர் மீநவர் வெஞ்சிநச் சளுக்கியர் வல்லவர் முதலென வணங்க வீற்றிருந்து தரா தலம் பரித்த ஜயங்கொண்ட சோழந்

11. உயர்ந்த புகழ் ஸ்ரீ கோவிராசகேசரி பந்மராந உடையார் ஸ்ரீராஜாதி ராஜதேவற்கு யாண்டு ௨௰௪ ஆவது ஜெயங்கொண்ட சோழமண்டலத்து பங்கள நாட்டு[டெ]*தற்கில் வகைச் செளிறூர்[4] நாடாந புதந[ல]பாடி நாட்டு தாமரைபாக்கத்தூரோம் நிலவி

12. லையாவணமாவது எங்களூர் திருவங்கீசுவரம் உடைய மஹாதேவர் ஸ்ரீபண்டா[ர]*த்து உடைார் ஸ்ரீராஜேந்த்ர சோழதேவர்க்கு[5] யாண்டு ௩௰௧ ஆ(றா)வது எங்களை வதைத்த பரிவாரம் இடமாட்டாமையில் புறசாந்து குடிபோய் பரிவாரமடி[மை]*மக்

13. காசு போக[ா]*மையில்[6] எங்கள் இட்டளித்தார்க்கு இத்தேவர் ஸ்ரீ பண்டாரத்துக் கொண்டு பரிவாரம் சீசேவகத்துக்கு இட்ட[காசு]* முப்பது இக்காசு முப்பதுக்கும் உடையார் ஸ்ரீராஜாதிராஜதேவற்கு

14. யாண்டு ௨௰௪ ஆவது வரையளவும் இக்காசும் பலிசையும் கு(ட்)டுக்க மாட்டாமையில் இக்காசுக்கும் பலிசைக்கு[ம்]* இத்தேவர்(ற்)க்கு நாங்கள் விற்றுக் குடுத்த நிலமாவது எங்க

15. ளூர் நெட்டேரிவாய் நீரே[று]* நில[ம்] நெட்டேரிக்கரைக்கு மேற்கும் எங்களூர் பெரிய ஏரிக்குப் பாய்ந்த வாய்க்காலுக்கு வடக்கும் இத்தேவர் சாலாபோகத்துக்குப் பாய்ந்த வாய்க்காலுக்கு கிழக்கும் ம[டி]கிழாந் புரத்து கரைக்குத் தெற்கும் நடுவுபட்ட நிலம் பழம்படி பதின்[சாண்] கோலால் மூவாயிரங் குழியும் இக்கூறின நாற்பாற்கெல்லைக்கும் நடுவுபட்ட நிலம் உடும்போடாமை தவழ்ந்த நிலம்உ[ண்]*ணிலம் ஒழிவிந்[7]

16. றியே இறையிலி தேவதாநமாக இத்தேவர் பண்டாரத்து நாங்கள் கொண்ட காசு முப்பது[8]க்கும் பலிசைக்கும் விற்றுவி லையாவணஞ் செய்து குடுத்தோம் தா[ம]*ரைப் பாக்கத்து ஊரோம் இந்நிலத்துக்கு இதுவேய் விலை திரவியமும் இறைத்திரவ்வியமும் ஆக இப்பரிசு விலையற கொண்டு இறைஇழிச்சி இறையிலி தேவதாநமாவதாக இன் நிலம் சுட்டி இறை எச்சோறு ஏரிக்காடியும் நீர்விலையு

17. ம்(நீர்விலையும்) ஏ[ரி]*க்காலும் [பட்டிக்] காலும் உள்ளிட்டு திருக் கொற்றவாசலாறு போனக்குடிமை எப்பேற்பட்டதுங் காட்டப் பெறாதி தாகவும் இந்நிலத்துக்கு தலைய் நீ(ர்)ரும் கடைநீரும் பாய்ச்சிக் கொள்ளப் பெறுவதாகவும் இதுவேய் பொரு[ள்]*மாவறுதிப் பொருள்ச் செலவோலை யாவதாகவும் ஓலைக்குற்றமும் எழுத்துக் குற்றமும் இல்லாதிதாகவும் இவ்வோலைப் படியே உடையார் ஸ்ரீகோயிலிலேய் தேவர்கந்மிகள் சிலாலேகை செய்து கொள்ளப் பெறு[வா]*ராகவும் இப்பரிசு இறை இறிச்சி இறையிலி தேவதாந(ம்)மாகத் திருவங்கீஸ் வரம் மஹாதேவர்க்கு இந்நிலம் விற்றுக் குடுத்தோம்

18. தாமரைப்பாக்கத்து(ா) ஊரோம் இவர்கள் சொல்ல வெழுதிநேந் பங்கள நாட்டு உலகளந்த சோழபுரத்து வியாபாரி குமாரந்தை கலியந் அரவணையந்நேந் இவை எந்நெழு[த்]*து இப்படி அறிவேந் தாமரைப் பாக்கிழாந் அரைய[ந்ந]ல்லந் தேவந் இப்படி அறிவேந் திரு[த்] தாமரைப் பாக்கிழாந் சூற்றியடி[ய]*ந்நே[ந்]* இப்படி அறி(றி)வேந் தா[ம]*ரைப்பாக்கிழாந் ஆநைமோடிநதே[ந்] இப்படி அறிவேந் தாமரை[9]ப் பாக்கிழாந் சூற்றியாடவலந் இப்படி அறிவேந் தாமரைப் பாக்கிழாந் அத்திம[10]

---

1. 'சேனையும்' என்றிருக்க வேண்டும்.
2. 'விசையாதித்தநுங்' என்றிருக்க வேண்டும்.
3. 'வடபுலத்திருக்காலாவது' என்றிருக்கலாம்.
4. இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் சேந்தனூர் என்று உள்ளது.
5. இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் ராஜராஜதேவர் என்று உள்ளது.
6. 'போநமையில்' என்றுமிருக்கலாம்.
7. வரி எண் 14 வடபுற ஜகதியில் முடிந்த பிறகு அதனைத் தொடர்ந்து மேற்புற ஜகதியின் அடிப்பகுதியில் இவ்வரி தொடர்கிறது. இறுதியில் இரண்டு வரியாக மடித்துப் பொறிக்கப்பட்டுத் தென்புற ஜகதியில் மீண்டும் தொடர்கிறது. இதனால் இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் இக்கல்வெட்டு 160 மற்றும் 169 எண்களில் இரண்டு கல்வெட்டுகளாக வெளியாகியுள்ளது. அறிக்கைக் குறிப்பில் 160 எண் கல்வெட்டு முற்றுப்பெறவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
8. 'து' எழுத்து வரியின் கீழே பொறிக்கப்பட்டுள்ளது.
9. 'ரை' வரியின் கீழ் பொறிக்கப்பட்டுள்ளது.
10. கல்வெட்டின் இறுதிப் பகுதியை அறிய முடியவில்லை. 'அத்திமல்லன் எழுத்து' என்பதுடன் கல்வெட்டு முற்றுப்பெறல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 16 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 923 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 165/1973-74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 9 |
| மன்னன் : | முதலாம் பராந்தகன் | | |

இடம் : அக்னீசுவரர் கோயிற் கருவறை மேற்புறப் பட்டிகை

குறிப்புரை : தாமரைப்பாக்கத்து இறைவனுக்குக் காஞ்சிபுரத்து அரிசாணிச்சேரியைச் சேர்ந்த தெலுங்குச் செட்டியும் வணிகனுமான சிங்குட்டி மகன் ஆறையாகிய வீர நாராயணன் என்பவன் ஒரு நந்தாவிளக்கிற்காகத் தொண்ணூறு ஆடுகள் அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

Summary : This Inscription is dated in the 16th regnal year of Parantaka Chola I. Records a gift of ninety sheep to burn a perpetual lamp to the deity of Tamaraippakkam by an individual, Arai alias Viranarayana Kavara-chetti, son of Singutti, a merchant of Arisanicheri of Kaccippedu.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மதுரையு(ங்) ஈழமுங் கொண்[ட]* கோப்பரகேசரி பந்மர்க்கி யாண்டு ௰௬ ஆவது கச்சிப்பேட்டு அரிசாணிச்சேரியில் வியாபாரி சிங்குட்டி[1] மகந் ஆறையாகிய வீரநாராயண கவற செட்டி [யே]
2. ன் திருத்தாமரைப் பாக்கத்து மஹாதேவற்குத் திரு ந[ந்]*தா விளக் கொன்றிநுக்கு வைத்த சாவா மூ[வா]*ப் பேராடு தொண்ணூறு இவை பந்மாஹேஸ்வர ரக்ஷை.

1. இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் 'சிறுகுட்டி' எனப் படித்துள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 32 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 166 / 1973-74 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மதுரைகொண்ட ராஜகேசரி சுந்தர சோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 10 |

இடம் : அக்னீசுவரர் கோயில் கருவறை மேற்குப்புறப் பட்டிகை மற்றும் குமுதம்.

குறிப்புரை : பங்களநாடுடைய பிரிதியங்கரையர் என்பவர் தாமரைப்பாக்கத்து இறைவனுக்கு நாள்தோறும் இரண்டு கலம் சிறப்பு உணவு (உத்தமாக்ரம்) படைப்பதற்காகச் சலப்பகைப் பூண்டியில் தூணி அளவு நிலம் கொடுத்ததை இக்கல்வெட்டுச் சொல்கிறது.

மதுரை கொண்ட ராஜகேசரி என்ற விருதுப் பெயர் சுந்தரசோழனுக்குரியதாகக் கருதப்படுகிறது. ஆனால் சுந்தர சோழன் 19 ஆண்டுகளே ஆட்சி செய்தான். இங்கு குறிப்பிடப்படும் 32-வது ஆண்டு ஐயப்பாட்டைத் தருகிறது. இக்கல்வெட்டு பழைய கல்வெட்டொன்றைப் படியெடுத்து மீண்டும் பொறிக்கப் பட்டதாகும். அப்படிப் பொறிக்கப்பட்ட போது ஆட்சி ஆண்டு தவறுதலாகப் பொறிக்கப்பட்டதா? என்பது தெரியவில்லை.

Summary : This inscription belongs to the Chola king Madurai konda Rajakesari Sundara chola. Engraved in continuation of No. 9 above, records a grant of land in Salappagaipundi to make some provision for feeding brahmanas (uttamagram) daily in the Mahadeva temple of Tamaraippakkam by Irumadi Prithiyangaraiyan of Pangala nadu.

The 32nd regnal year mentioned in this record raises a doubt. Maduraikonda Rajakesari Sundra Chola's highest known regnal year is only 19. As the inscription is reengraved, some errors might have been occured while doing so

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ உடையா[ர்]* ஸ்ரீ மதுரை கொண்ட கோராசகேசரி பன்மர்கு யாண்டு ௩௰௨ ஆவது பங்களநாட்டுடைய இருமடி சோழப் பிரிதியங் கரையநேன் பங்கள நாட்டு

2. த்தாமரைப்பாக்கமுடைய மஹாதேவற்கு உத்தமாக்ரம் உண்ணும் கலம் இரண்டிநுக்கு நித்தம் அரிசி நாழியும் கறிநாலுந் தயிர் நாழியும் நெய்யாழாக்கு வெறுங்காய் நாலும் வெற்றி(ல்)லை

3. யெட்டும் சந்திராதித்தருள்ளளவும் நித்தப்படியும் உண்பதாக விந்நா[2]ட்டுச் சலிப்பகை பூண்டியிலே[1] தூணி நிலம் வைத்து சாசந(ம்)ஞ் செ[ய்]*து குடுத்தேன் பங்கள நாட்டுடைய இருமடிசோழ பிரிதியங்கரையநேன் இது பன்மாயேஸ்வர ரகைஷ இது இறக்குவான் கங்கையிடைக்கு மரியிடை எழுநூற்றுக் காதமாற்றில் நடுவுபட்டா[ர்]* பாவஞ் செய்த பாவத்தை

4. தப்படுவார் இ[து]* பாம்பணி கிழான் எழுத்து

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY, MADRAS-28.
LIBRARY.
Acc No.
Date

---

1. சலப்பகைப் பூண்டி - என்றும் இவ்வூர்க் கல்வெட்டுகளில் (எண் 18) கூறப்பட்டிருக்கின்றது.

2. 'க', 'ய' எழுத்துகள் வரியின் கீழ் பொறிக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 4 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1016 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 167/1973-74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 11 |
| மன்னன் : | முதலாம் இராசேந்திரன் | | |

இடம் : *அக்னீசுவரர் கோயில் கருவறை மேற்குப்புறக் குமுதம் மற்றும் ஜகதி*

குறிப்புரை : *ஊர்க்கல்வெட்டு எண் 10 ன் இறுதியில் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளது. பங்கள நாட்டைச் சேர்ந்த அதிஇராமன் ராஜராஜன் என்பவன் தாமரைப் பாக்கத்துக் கோயிலில் ஆடவல்லார் (நடராசர்) செப்புத்திருமேனி ஒன்றினைச் செய்தளித்து அதற்கான இரு வேளை வழிபாட்டின் போது திருவமிர்து படைப்பதற்காக 800 குழிகள் பரப்புள்ள ஒரு நிலத்தைத் தாமரைப் பாக்கம் ஊராரிடமிருந்து விலைக்குப் பெற்றுக் கொடுத்துள்ளான். இரண்டு வேளை திருவமிர்திற்கு அரிசி, பொரிக்கறி, நெய், தயிர், வெற்றிலைப் பாக்கு ஆகியவை நல்கப்பட்டன. இவற்றின் அளவுகளும் கல்வெட்டில் சொல்லப்பட்டுள்ளன. கொடுக்கப்பட்ட நிலத்தின் நான்கு எல்லையும் பிறவிவரங்களும் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளன.*

Summary : This inscription is dated in the 4th regnal year of the king Parakesari Rajendra chola I. Engraved in continuation of No. 10 above and seems reengraved. Records the grant of land by purchase from the Urar of Tamaraippakkam by Rajarajan alias Atiyiraman of Pangalanadu. It was made as tax free, and provided for food offerings to the image of Adavallan, which was set up by him in the Thiruvangisvaramudaiyar temple at Tamaraippakkam. It is interesting to note that only from this period onwards the name of the deity, was came to be known as Thiruvangisvaramudaiya Mahadeva.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பந்மரான உடையார் ஸ்ரீராஜேந்த்ர சோழ தேவற்கு யாண்டு ௪ ஆவது ஜயங்கொண்ட சோழமண்டலத்து தெற்கில் வகை செளுறூர் நாடாந புதநலப்பாடி நாட்டுத் தாமரைப் பாக்கத்து ஊரோம் நி(ை)லவிலை யாவணமாவது பங்களநாடுடைய அதியிராமன்நான ராஜராஜந்நேன் (திரு)

2. திருத்தாமரைப்பாக்கத்து மஹாதேவற் திருவங்கீஸ்வர முடையார்[1] கோயிலில் எழுந்தருளிவித்த வாடவல்லார்க்கு ஸந்திக[2] நுக்கு திருவமுர் தரிசி இருநாழியாக ஸந்தி இரண்டிநுக்கு திருவமுர்தரிசி நாநாழியும் பொறிக்கறியமுதொந்றும் நெய்யமுர்தாழாக்கும் தயிரமுர்துரியும் அடைக் காயமுர்து இரண்டு வெற்றிலை அமுர்தும் இப்படி சந்திரா(தி)

3. திதர் உள்ளாவும் சந்நியிரண்டிநுக்கும்(ந்) தாமரைப்பாக்கத்தூராரோம் பங்கள நாடுடைய ராஜராஜன் பக்கல் நாங்கள் இறை திரவ்விய மறக் கொண்டு சில[ா]* லேகை செய்து குடுத்த நிலமாவது கற்குத்து செறு இ[ர]*ண்டும் கீழ்பாற்கெல்லை தெற்(க்)கு நோக்கி (தெற்குநோக்கி) போனவதிக்கு மேற்(க்)கும் வதி[யி]*ல் நின்றும் மேற்கு நோக்கி போன வதிக்கு வடக்கும்

4. வடக்கு நோக்கிப் பாய்ந்த காலுக்கு கிழக்கும் பழந்தேவதாந குண்டி லுக்கு அற்[ச்]*னாபோகத்துக்கு தெற்கும் இனம்புரி தூம்பின் நின்று பாய்ந்து கீழைக் குண்டில்லிரண்டும் வடபாற்கெல்லை பாலி குண்டில்க்கும் பழந்தேவதாநம் திருவமுர்து குண்டிலுக்கு தெற்கு புத்தாங்கிழான் மேட்டுக் குண்டிலுக்கு மேற்கு ஏரிகீழ்க்காலுக்கு

5. வடக்கும் அதி(ர)யிராமன் புத்தறை நா(ல்)லு கழுவலும் கீழ்பாற்கெல்லை ஆலம்பள்ளி எல்லைக்கு மேற்கும்[3] ஏரிகரைக்கு வடக்கும் தொங்கி செறுவில் மேட்டுத் தத்தந்தை குண்டிலுக்குந் தெற்கும் இவ்வெல்லை யகப்பட்ட முந்றிட்டில் நிலக்குழி எண்ணூறு(ம்)ங் கொண்டு இந்நில[ம்]* வந்ததை சந்திராதித்தியவற் செய்வதாகவும் இந்

6. நிலத்துக்கு நித்தம் நீரோடு வாய்க்காலும் பெறுவதாகவும் இந்நிலம் சுட்டிந நீர்விலையும் மற்றும் யெப்பேர்பட்டதுங் க[ா]*ட்டப் பெறாத தாகவும் இப்பரிசு விலை ஸ்ரரவனம் செய்து குடுத்தோம் தாமரைப் பாக்கத்தூரோம் இது பந்மரயேஸ்வர ரக்ஷை

---

1. இந்தியக்கல்வெட்டு ஆண்டறிக்கையில் திருவக்னீஸ்வரமுடையார் என்று படித்து உள்ளனர். 'டை' வரியின் கீழே பொறிக்கப்பட்டுள்ளது.
2. ஒன்று என்பது குறியீட்டால் காட்டப்பட்டுள்ளது.
3. 'ம்' வரியின் கீழே பொறிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 41 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 948 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 170/1973-74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 12 |
| மன்னன் : | முதலாம் பராந்தகன் | | |

இடம் : *அக்னீசுவரர் கோயில் கருவறை மேற்குப்புற ஜகதி*

குறிப்புரை : *கல்வெட்டு எண். 11 ன் இறுதி வரியினைத் தொடர்ந்து இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. தாமரைப்பாக்கத்துக் கிழான் சிங்குட்டி குறும்பன் என்பான் தனது தாய் கேசிநங்கையின் சிறப்பிற்காகத் தாமரைப்பாக்கத்து இறைவனுக்கு ஒரு நந்தா விளக்கு எரிப்பதற்காகத் தொண்ணூறு ஆடுகள் கொடையளித்த செய்தியை, இக்கல்வெட்டு கூறுகிறது.*

Summary : This inscription is dated in the 41st regal year of Madurai konda parakesari, Parantaka chola I. Engraved in continuation of No 11 above. Records the gift of 90 sheep to burn a perpetual lamp to the deity of Tamaraippakkam by Singutti Kurumban, a landlord of Tamaraippakam for the merit of his mother Kesinangai.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ மதுரை கொண்ட கோப்பரகேசரி **பன்மர்க்கி யாண்டு** சமக
2. ஆவது திருத்தாமரைப் பாக்கத்து மஹாதேவற்க்குத் தாமரைப்பாக் கிழான் சிங்குட்டி[1] குறும்பநேன் எந்தாயார் கேசி நங்கையார்க்குத் தந்[ம]*மாக[2] சந்த்ராதித்தியர் உள்ளளவும்(ந்) திரு நந்தா விளக்(கு) கொன்றிநுக்கு வைத்த சாவா மூவா பேராடு தொண்ணூறு இவை **பன்மரயேஸ்வர ரகைஷ**

---

1. இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் 'சிறுகுட்டி' என்று படிக்கப்பட்டுள்ளது.
2. இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் 'சுதன..' என்று படிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 4 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 1016 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்திடக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 171/1973-74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதலாம் இராசேந்திர சோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 13 |

இடம் : அக்னீசுவரர் கோயில் கருவறை மேற்குப்புற ஜகதி

குறிப்புரை : ஊர்க்கல்வெட்டு எண் 12 ன் இறுதிவரியினைத் தொடர்ந்து இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

தாமரைப்பாக்கத்து இறைவனுக்கு நந்தவனம் அமைப்பதற்காகப் பங்கள நாடுடைய அதியிராமன் ராஜராஜன் என்பவன் சலப்பகைப் பூண்டியின் மேற்குப்பகுதியில் அமைந்த தென்னந்தோட்டம், பலா, இலுப்பை முதலிய மரங்கள் அடர்ந்த 500 குழி பரப்புள்ள நிலத்தினைக் கொடையாகக் கொடுத்த செய்தியை இக்கல்வெட்டு கூறுகிறது. இவனது ஆணைக்கிணங்க இவனது கன்மி (அலுவலர்) அங்கமுழான் என்பான் இச்செய்தியை ஆவணமாக எழுதிக் கல்லில் பொறித்துள்ளான்.

Summary : This 4th regnal year record of Rajendra I, refers to the donation of a grove, by one Adiyiraman Rajarajan. This 500 Kuli of grove was situated on the western side of the village Salappagaippundi, and was donated as Nandavanappuram.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பன்மரான உ

2. டையார் ஸ்ரீ ராஜேந்த்ரசோழ தேவற்க்கி யாண்டு ச ஆவது ஜயங் கொண்ட சோழ மண்டலத்து பங்களநாட்டு தெற்கில் வகை செளுறூர்[1] நாடான புதநலப்பாடி நாட்டு சலப்பகை பூண்டி[யி]*ன் மேலை தெங்கந் தோட்டமும் தெங்கும் சுற்று பிலாவும் இலுப்பையு[ம்]* மரப்பயிர் குழி ஐஞ்னூறும் இத்தேவர்க்குத் திருநந்தவாந

3. மாகச் செ[ய்]*து குடுத்தேன் பங்களந் குடைய அதியிராமந் ராஜராஜ நேந்நருள்ளி செய[2] சிலாலேகை செ[ய்]*து குடுத்தேன் இவர் கந்மி அங்க முழாந்நேந் இவை எந்நெழுத்து இது **பந்மாஏஸ்வர** ரக்ஷை

1. இந்திடக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் 'சேந்தனூர்' என்று படிக்கப்பட்டுள்ளது.
2. 'அருளிச்செய்ய' என்று படிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 30 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1048 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 172, 173/1973-74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 14 |
| மன்னன் : | முதலாம் இராஜாதிராஜன் | | |

இடம் : *அக்னீசுவரர் கோயில் கருவறை தெற்குப்புறச் சுவர், பட்டிகை, கண்டம் மற்றும் குமுதம்*

குறிப்புரை : *தாமரைப்பாக்கம் கோயிலில் பங்குனி உத்திரத்தின் போது நிகழ்ந்த ஏழு நாள் திருவிழாவிற்கு வருகை தந்த சிவனடியார்கள் (மாகேசுவரர்) ஏழு நாளும் கோயிலில் உணவுண்பதற்காக, கவறைவிடங்கன் சாலை என்றொரு உணவுச் சாலைக்குத் திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர் என்ற வணிகர் குழு கடல்லாடிப் பூண்டி ஊராரிடம் எண்ணூறு பொன் கொடுத்து மூன்று துண்டுகளாக (தடி) உள்ள நிலத்தினை விலைக்கு வாங்கிக் கொடுத்துள்ளனர். இந்நிலம் சாலாபோகம் என்று வகைப்படுத்தப்பட்டு இதற்குரிய வரிகள் நீக்கப்பட்டன. விலைக்குப் பெறுவதற்கு முன்பிருந்த நீர்ப்பாசன வசதிகள் தடையில்லாமல் தொடரவும் வகை செய்யப்பட்டது.*

*இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் 172, 173 ஆகிய இரு எண்களில் இக்கல்வெட்டு இருபிரிவாக வெளியிடப்பட்டுள்ளது. முற்றுப்பெறாத கல்வெட்டு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

Summary : This inscription belongs to the 30th regnal year of the Chola king Rajadhiraja I and begins with the Tamil prasasti Tingaler Taru etc. It refers to a land donation made by a merchantile Guild called Thisai Ayirattu Ainurruvar. They purchased the land from the villagers (ūrar) of Kadaladi pundi for 800 Gold (Pon) and donated it, as "Salabhogam" This donation was offered to feed the Maheswaras, at Kavarai Vitankan Salai during the Seven days annual festival of Panguni Uttiram.

கல்வெட்டு :

1. [ஸ்வஸ்திஸ்ரீ]* திங்களேர்தரு தன்றொ [ங்கல் வெண்குடைக் கீழ் நிலமகள் நி]

2 லவ மலர்மகள் புணர்ந்து [செங்] கோல்லோச்சி [க்கருங்] கலி கடிந்[து

3. சிறிய தாதையும் திருத்தமை[யனை]யும் குறிகொள் ]இள]ங் கோக் களை[யு]

4. ம் நெறியுணர் தன்றிருப்புதல்வர் தன்னையும் [துன்]றெழில் வில்லவர் மீனவன் கங்கந் இலங்

5. கையர்[க்]கிறைவன் புறங்கெழிற் பல்லவன் கன்[னக்குச்சி]யர் காவலன் நெந[ப்] பொந்நனி சுட[ர்]

6. மணி மகுடஞ்சூட்டி படர்புகழ் ஆங்கவற் கன்னா [டருளிபாங்] குறு மன்னு பல்லூழியுள் தென்னவ

7. ர் மூவருள் மானாபரணந் பொன் முடியானா பரு [மணிபசுந்த]லை பொருகள[த்தரி]ந்து வா[ர்]*வள வி[யக]

8. கழல் வீரகேரளனை முனைவயில்ப் பிடி . . . . .

9. . . . . . . [1]

10. கவரியும் சிங்காசநமும் வெண்[களத்திழ]ந்து தந்முடிவிழ [த] லை விரி தோட தளர்ந்தோ

11. டி தொல்லையில் முல்லை ஊர்த்துர[த்]*தி ஒல்கலில் வேணாட்டரைசை சே*ணாட்டொதுக்கி மே

12. வு புகழ் இராமகுட வகுட[2]முநிந்து மிடல்கெழு வில்லவர் குடர்மடி கொண்டு தந்நாடு விட்

13. டோடி காடுபுக்கொளிப்ப பஞ்சிய பொது(மல) மலை நாடுங் கெஞ்சலில் வேலை கெழு காந்த

14. ளூர்ச்சாலை கலமறுப்பித்தாகா (கா)மல்லநும்[3] அஞ்சகேவுதந்றாங்கரும் படைஆல் ஆ[ங்]

15. . . . . களிற்றொடு . . . . [4]

16. தவிக்கியும் விசை ஆதித்தநும் கருமுரட்காங் . . . . . .

17. [நி]மிர் சுடர் பொன்னோடயங்கெரிப் புரவியொடும் பிடித்து தந்நாடை யிற் ஜயங்கொண்டொ

18. ன்னார் கொள்ளிப்பாக்கை உள்ளொரிமடுப்பித் தொருதநித் தண்டாற் பொருகடலிலங்கை

19. யர் கோமகன் விக்கிரமபாஹுவின் யருமமிம[கு]ட [காண்டகு] தன்னதாகிய தன் கன்னகுச்சியிலும் ஆர்கலி

20. ஈழஞ்சீரி செ[த]ன்றெ[ண்]ணி உளங்கொள் தந்நாடு தன்துறசே [வாடு]ம் புகுந்து விள[ங்]கு முடி கவித்த வீரசலாமேகன் பொருகளத் தஞ்சி

21. த் தந்நார் களிறி[ழி]ந்து [னகவ்]வையிற்றோடிக் காதலியொடுந் றவ்வையை பிடித்து[த்த]ாயை மூக்கரிய ஆங்கபிமான நீங்

22. [கு]வதற்காக மீ[ண்]டு வந்[து] வாட்டொழில் உழந்து வெங்க[ளத்து] லந்த வச்சிங்[க]*ளதரைசை [எ]ல்லொளி[த்தட] மணி முடி[யுங் கொண்]டு வட

23 — 25 . . . . . .

26. யார் ஸ்ரீராஜாதிராஜதேவற்க்கு யாண்டு உம ஆவது ஜயங்கொண்ட சோழமண்டலத்து பல்குன்ற கோட்டத்து

27. ப் பங்கள நாட்டுத் தெற்கில் வகை செலிறூர்[7] நாடான புதநல்லபாடி நாட்டுக் கடல்லாடி பூண்டி ஊரோம் நான்குதிசை

28. யாயிரத்து ஐந்நூற்றுவர்க்கு எங்களூர் நீர் நிலம் பற்றாமன்புத்துறை செறுவும் இதந் தெற்கு

29. . . தடி மூந்நிநுக்கு எண்ணூ[று] பொந்நாக கொண்டு விலையற விற்றுக்குடுத்தோம்

30. திருத்தாமரைப்பாக்கத்து திருவ[ங்]*கீஸ்வர முடைய மஹாதேவற்கு திருப்பங்குனி [உ]த்திரத் திருநாளால் திருவிழா சேவிக்க

31. வந்த ஸ்ரீம(ஹ)ா ஹேஸ்வரர் திருவிழா ஏ[ழு]* நாளும் ஸ்ரீய்கோ[யி]* லிலே அ[மு]து* செய்வதர்க்கி[8] கவறை விடங்கந் சாலைக்கு இறையிலி சாலா

32. போகமாக இதற்கேற்ற விலைத் த்ரவ்யமும் இறை த்ரவ்யமும் அறக்கொண்டு இறையிலியாக இந்நில(ம்)ஞ் சுட்டிந நீர்விலை

33. யும் ஏரிக்காடியும் உள்ளிட்டு யாதொந்று[ம்][8] கொள்ளப் பெற[ா]* ததாகவும் இதுக்கு முந்பு பாஞ்சு வரும் நீரும் நீரோடு வாக்கால்லு

34. ம் (வாக்காலும்) உரித்தாவதாகவும் பொருளறக் கொண்டு விலை அறக் கவறை விடங்கந் சாலைக்கு நாந்(க்)கு திசையாயிர[த்து]*

35. ஐநூற்றுவர்க்கு விற்று சிலாலேகை செய்வித்துக் குடுத்தோம் கடலாடி பூண்டி ஊரோம் இது ஸ்ரீபந்மாயேஸ்வர ரக்ஷை

---

1. இவ்விடங்கள் சிமெண்ட் பூச்சில் மறைந்துள்ளன
2. 'மூவர்கெட' என்றிருத்தல் வேண்டும்
3. 'ஆகவ மல்லநும்' என்றிருத்தல் வேண்டும்
4,5,6. இவ்வரிகள் தெளிவில்லாமல் உள்ளன
7. ஊர்க்கல்வெட்டு எண்கள் 11, 13 ஆகியவற்றில் 'செஞூரர்' என்று உள்ளது. இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் சேந்தனூர் என்று வெளியிடப்பட்டுள்ளது.
8. 'செய்வதற்கு' என்று படிக்கவும்.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
10089
LIBRARY
MADRAS-28.

த. நா. தொ. ஆய்வுத்துறை தொடர் எண் : 15 / 1998

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 34 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 941 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 174/1973-74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 15 |
| மன்னன் : | முதலாம் பராந்தகன் | | |

இடம் : அக்னீசுவரர் கோயில் கருவறை தென்புறப் பட்டிகை மற்றும் குமுதம்

குறிப்புரை : பங்கள நாடுடைய பிரிதிகங்கரையன் என்பவன் காந்தளூர், மூதூர், ஈச்சம் பூண்டி ஆகிய ஊர்கள் ஒவ்வொன்றும் தாமரைப்பாக்கம் இறைவனுக்கு 5 கழஞ்சுவீதம் வழங்க வழி செய்துள்ளான். அவ்வவ்வூர்களில் உள்ள கோயில் நிலங்களை (தேவதானம்) அவ்வவ்வூர்களே காணி செய்து கொள்ளவும் வகை செய்துள்ளான். இந்நிலங்களுக்கு நீர்விலை, ஏரிக்காடி ஆகிய வரிகள் வசூலிக்க வேண்டாம் என்றும் நிர்ணயித்திருக்கிறான். இச்செய்திகளை இக் கல்வெட்டு கூறுகிறது.

Summary : This 34th Regnal year Record of the Chola king Parantaka I, refers to the arrangements made by the local Chieftain Prithiyangaraiyan, He exempted some devadana lands from some taxes like Nirvilai. Erikkadi etc. and handed over them to the respective villagers as Kani rights. As a reciprocal, he directed the villagers to pay 5 kalanju of Gold to the deity of Tamaraippakkam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மதுரை கொண்ட கோப்பரகேசரி பந்ம[ர்]*க்கு யாண்டு ௩௰௪[1]ஆவது பல்குன்றக் கோட்டத்துக் கீழ் வேழ்நாட்டு காந்தளூர்

2. க் கூற்றத்து தாமரைப்பாக்கத்து மஹாதேவர்க்கு தெற்கி[ல்]* வகை புதநலப்பாடி நாட்டு காந்தளூரும் மூதூரும்[2] ஈச்சம் பூண்டியு[மூர்]

3. தோறும் ஐங்[க]*முஞ்சு பொன் தேவர்கேய் வைப்பதாக சந்திராதித் தவற் காணி செய்து குடுத்தேன் பங்கள நாடுடைய இருமடி சோழ பிரிதிகங்கரையந்நேன்

4. இவ்வூர்களில் தேவத[ா]*நங்கள் இவர்களேய் காணி செய்து கொள்ளப் பெறுவதாகவும் இவை யிற்றினுக்கு நீர்விலையும் ஏரிக்காடியும் கொள்ள

5. பெற ‹ திதார்[3] இப்பரிசு செ[ய்]*து குடுத்தேன் இருமடிச் சோழ பிரிதி யங்கரையநேன் இறக்கு வான் ஏழாநரகத்துக் கீழாநரகம் புகுவான்

---

1. இந்தியக்கல்வெட்டு ஆண்டறிக்கையில் 24 ஆவது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
2. மேற்கண்ட அறிக்கையில் 'முழுதூர்' என்று வெளியாகியுள்ளது
3. 'பெறாதிதாகவும்' என்றிருக்க வேண்டும்
4. இந்தியக்கல்வெட்டு ஆண்டறிக்கையில் இக்கல்வெட்டு முற்றுப்பெறவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 13 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 920 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 175 / 1973-74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேசரிவர்மன் (முதலாம் பராந்தகன்) | ஊர்க் கல்வெட்டு எண் | 16 |

இடம் : *அக்னீசுவரர்கோயில் கருவறை, அர்த்தமண்டபத் தென்புறப்பட்டிகை மற்றும் குமுதம்*

குறிப்புரை : *பங்கள நாடுடைய பிரிதியங்கரையன் மகன் அத்திமல்லனாகிய கன்னரதேவ பிரதியங்கரையன் என்பவன் தாமரைப்பாக்கத்து இறைவனுக்குப் படைத்து, பிராமணர்கள் மூவர் உண்பதற்காகப் பிடாரக்கிழார் பூண்டி, சலப்பகை பூண்டி ஆகிய ஊர்களில் நிலம் கொடுத்ததை இக்கல்வெட்டு கூறுகிறது. இவன் இரண்டு கலமும், பிள்ளையார் (இவரது மகன்/இளவரசு) அதியிராமன் ஒரு கலமும் ஆக மூன்று கலங்கள் மூன்று பிராமணர் உண்ண ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. ஒரு பிராமணருக்கு குத்தலரிசி 2 நாழி நெய் 1 ஆழாக்கு. தயிர் 1 நாழி, கறி 4, தலைக்கு எண்ணெய் 1 ஆழாக்கு மற்றும் வெற்றிலை-பாக்கு என்று விவரப்பட்டியலும் தரப்பட்டுள்ளது.*

Summary : This inscription is dated in the 13th regnal year of the Chola king Parantaka I. Registers a gift of lands in the villages of Pidarakkilar Pundi and Chalappagaippundi to the Mahadeva at Tamaraippakkam for feeding three brahmanas by Attimallan alias Kannaradeva Prithigan-garaiyan, son of Prithiyangaraiyan of Pangalanadu. Among the three measures of food (uttamagramam or kalam) two were endowed by him, and the remaining one by Pillaiyar Atiyiraman [his son and prince] The kani right of the lands, to the land lords [Tamaraippakkilars] of Tamaraippakkam, was also given by him. Also refer inscription No:18

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேஸரி பன்மர்க்கு ய[ா]*ண்டு ௰௩ ஆவது பங்கள நாடுடைய ப்ரதியங்கரையன் மகன் அத்திமல்லநாகிய கன்னரதேவப் பிரிதியங்கரையனேன் இந்நாட்டு புதநலப்பாடி நாட்டுத் தாமரைப் பாக்கத்து மஹாதேவர்க்கு தாமரைப்பாக்கத்தோடும்மடைந்த[1] பிடா[ர]*க் கிழா[ர்]* பூண்டியும் ச[லப்ப]

2. நைபூண்டி இணைபுல மேலாற்றூர்க் காலுக்கு வடக்கும் காட்டுப் பட்டிக்குக் கிழக்கும் சிற்றேத்தச் செறுவுக்குக் கிழக்கு கற்(ச்)செறு வுக்குஞ் சிற்றேத்தச் செறுவுக்குத் தெற்கும் நெட்டேரிக்குக் கிழக்கும் இன்னிலம் உண்ணில[ம்] மொழிவின்றி உதக பூர்வஞ் செய்து குடுத்தேன் தா[ம]*ரைப் பாக்கிழார்களுக்கேய் காணி

3. செ[ய்]து குடுத்தேன் இந்நிலம் உழுது கொண்டு மாண்டு கொண்டுங் கொண்டு இவர்கள் செய்வதான நிமந்தம் உத்தமாக்ரமம் குருக்கள் முன்பு வைத்து உ[ண்]*ணுவதா[க] கல[ம்] மூன்றும் கைக்கொண்டு வைத்த கலம் இரண்டு பிள்ளையார் அதியிராமர் வைத்த கலமொன்றும் ஆக மூவர் பிராஹ்மணர்க்கு தியாந வே

4. ல்வையில் உண்பதாக வைத்தபடி பேரால் குத்தலரிசி இருநாழியும் பேரால் நெ[ய்]*யாழாக்கும் பேரால் தயிர் நாழியும் பேரால் கறிநாலும் பேரால் தலைக்கெண்ணை ஆழாக்கும் பேரால் வெறுங்காய் இலையும் பெறுவதாகவும் இப்பரிசுத் தாமரைப்பாக்கிழார்களேய் யாண்டு பூண்டுஞ் சந்த்ரா

5. தித்தன் உ(ரு)ள்ளளவும்(ஞ்) செல்வதாக வைத்தேன் கன்னரதேவப் பிரிதியங்கரையநேன் இத்தன்மம் ரக்ஷிப்பான்நடி யென் தலைமேலிந இது இறக்குவாந் கங்கையிடைக் குமரி - எழுநூற்றுக் காதமாற்றா[ர்]*ச் செய்த பாவத்தை படுவர் இவை பொ[ய்]யிலி எழுத்து இவை அனைய மந் எழுத்து

6. இவை புத்துழாந் எழுத்து இவை மழையூருடையாந் எழுத்து உ[2]

---

1. 'தாமரைப்பாக்கத்தோடு மிசைந்த' என்று படிக்கவும்

2. இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் (175/1973-74) இக்கல்வெட்டு முற்றுப் பெற வில்லை என்று குறித்துள்ளனர். இக்கல்வெட்டின் பின்பகுதி (வரிகள் 3-6) குமுதத்தில் உள்ளது. அதனை ஆண்டறிக்கை எண் 181/1973- 4 உடன் சேர்ந்துள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 17 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 924 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 182/1973-74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 17 |
| மன்னன் : | முதலாம் பராந்தகன் | | |

இடம் : அக்னீசுவரர் கோயில் கருவறை, அர்த்தமண்டபங்களின் தென்புறக் குமுதம்

குறிப்புரை : கல்வெட்டு எண் 16 ன் இறுதியில் தொடர்ந்து வெட்டப்பட்டுள்ளது.

பங்களநாட்டுச் சீதாய மங்கலத்தைச் சேர்ந்த கங்கிளகோன் என்பவன் தாமரைப்பாக்கத்து ஊராரிடம் 500 குழி கொண்ட ஒரு நிலத்தினை விலைக்குப் பெற்றுத் தாமரைப்பாக்கத்து இறைவனுக்கு ஒரு பொழுது வழிபாட்டில் 4 நாழி அரிசி படைக்க வகை செய்துள்ள செய்தியை இக்கல்வெட்டுக் கூறுகின்றது. இவன் இந்நிலத்திற்கான விலையைக் கொடுத்த தோடு அதற்குரிய வரிக்கான தொகையையும் (இறைத்திரவியம்) கொடுத்து வரியில்லாமல் செய்துள்ளான்.

Summary : This inscription is dated in the 17th regnal year of the chola king Parakesarivarman Parantaka I. It refers to the gift of fivehundred kuli of land for providing food offerings to the Mahadeva at Tamaraippakkam by a certain Gangilakkon of Sitayamangalam in Pangala nadu.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மதுரை கொண்ட கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு ௰௭
வது பங்களநாட்டுச் சீதாயமங்கலமுடைய கங்கிளகோனேன்[1] தாமரைப்
பாக்கத்து மஹாதேவ[ர்]க்கு ஸந்தி ஒற்றினுக்கு திருவமுர்தரிசி நா
நாழிக்கு புத[நல]

2. ங் கிழான் மேபுதுத் தீத்தத(ா)டி தாமரைப்பாக்கத்து ஊரார்க்கு விலைத்திரவ்வி[ய]*மும் இறைத் திரவியமுமறக் குடுத்து வை[த்த]* குழி ஐந்நூறு இந்நிலங் கொண்டு தாமரைப்பாக்கத்தூ ஊராரேய்(ரேய்) சந்திராதித்தியருள்ள[ள]*வும் செல்வதாக இப்பரிசு இந்நிலம் வைத்தேந் கங்கிளகோநே[ன்][1]

3. இது **பன்மாயேஸ்வர** ரக்ஷை

1. இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் இவர் பெயர் **'கங்கக்கோன்'** என்றுள்ளது.

த. நா. தொ. ஆய்வுத்துறை — தொடர் எண் : 18 / 1999

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 12 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 919 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 181 / 1973-74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | கோப்பரகேசரி (முதலாம் பராந்தகன்) | ஊர்க் கல்வெட்டு எண் | 18 |

இடம் : அக்னீசுவரர் கோயில் கருவறை அர்த்தமண்டபத் தென்புறக் குமுதம், ஜகதி

குறிப்புரை : கல்வெட்டு எண் 17-ன் இறுதி வரியில் சிறிது இடம் விட்டு இக்கல்வெட்டு தொடர்ந்து பொறிக்கப்பட்டுள்ளது. பங்களநாடுடைய அத்திமல்லனான கன்னர தேவப் பிரிதிகங்கரையன் தான் சாலா போகமாகச் சலப்பகை பூண்டியில் தந்த நிவந்தநிலத்திலேயே பயன்படுத்திக் கொள்ளுமாறு மூன்று கலம் (உத்தமாக்ரம்) தாமரைப்பாக்கத்து கோயிலுக்கு வகை செய்ததை இக்கல்வெட்டு கூறுகிறது. இம் மூன்று கலம் அமுதுக்கும் அரிசி நாழி, நெய் உழக்காழாக்கு, கறி 6, எண்ணெய் உழக்காழாக்கு, பாக்கு 6, வெற்றிலை 12 என்ற விவரப்பட்டியலும் தரப்பட்டு உள்ளது. இம்மூன்று கலத்தில் இரண்டு இவனும் ஒன்று அதிராமனும் தந்துள்ளனர்.

Summary : This inscription is dated in the 12th regnal year of Kopparakesari Parantaka Chola I. Engraved in continuation of No. 17 above. Records the gift of three Kalams (uttamagramam) to the Mahadeva at Tamaraippakkam. It is stated that the expenditure incurred for three kalams will be meet out from the temple lands at Calappagaip pundi, which was already given to the temple for food offerings [as nivandha] by the chief Attimallan alias Kannaradeva prithiyangaraiyan of Pangala nadu.

**கல்வெட்டு**

ஸ்வஸ்தி ஸ்ரீ உடையார் கோப்பரகேசரி பந்ம[ர்]*க்கி யாண்டு ௰௨ ஆவது பங்கள நாடுடைய [வயிரி] அத்திமல்லநாகிய கன்நரதேவ பிரிதியங் கரையநேன் பங்[க]*ள நாட்டு தாமரைப்பாக்க முடைய மஹாதேவர்க்கு உத்தமாக்ரமம் கலமி(இ)[ர]*ண்டும் அதிராமந்வை

2. த்த கலம் மொந்றும் ஆகக் கலம் மூ[ன்]றுக்கும் நித்தம் அரிசி அறுநாழி யும் உழக்காழாக்கு நெய் மாறி ஆறும்[1] எண்ணை உழக்காழாக்கும் வெறு[ங்]* காயாறு[ம்] * வெற்றிலை பந்நிகண்டும்[2] சந்திராத்திய வரை சலப்பகை பூண்டி சாலாபோகத்தில் வைத்த நிமந்த[த்]திலே நித்தப் படியும் நிமந்தஞ் செலுத்துவதாக வைத்துக் குடுத்தேன் கந்நரதேவப் பிருதி கங்கரையனேன் இது இறக்குவான் கங்கையிடை குமரியிடை எழுநூற்றுக் காத மாற்றார் செய்த பாவத்தை படுவானவ இது பந்மபு[ரு]* யேஸ்வர [ர]*க்ஷை தாயமங்கல முடையாந் எழுத்து[3]

1. 'நெய்யும் கறி ஆறும்' என்று இருக்க வேண்டும்.
2. 'பந்நிரண்டும்' என்றிருக்க வேண்டும்.
3. இந்திடக் கல்வெட்டு ஆண்டறிக்கை எண் 181/1973-74 ல் முதல் வரியையும் ஊர்க் கல்வெட்டு எண்: 16 ன் 3, 4, 5, 6 ஆகிய வரிகளையும் ஒன்று சேர்த்து வெளியிட்டுள்ளனர் மேலும் கல்வெட்டு எண்: 16 (175 / 1973-74) முற்றுப் பெறவில்லை என்றும் குறித்துள்ளனர்.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY.
Acc No.
Date
MADRAS-28.



| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 10 ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்திடக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 190/1973-74 |
| மொழி : | தமிழ் | பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 19 |

இடம் : அக்னீசுவரர் கோயில் கருவறை மற்றும் அர்த்தமண்டப தென்புற ஜகதி

குறிப்புரை : கல்வெட்டு எண் 18 ன் இறுதியில் தொடர்ந்து பொறிக்கப்பட்டுள்ளது. பிடாரர் கிழார் பூண்டியில் இருந்த நிலங்கள் தாமரைப் பாக்கத்து இறைவனுக்கு வரியில்லா நிலங்களாக இருந்தன. ஏதோ சில காரணங்க ளால் அந்நிலை மாறியது (இறங்கி போன பின்னை). கோதண்டராமரின் அதிகாரி மந்தன் பலதேவன் என்பவன் அரசனுக்கு விண்ணப்பித்து பிடாரர் கிழார் பூண்டியைத் தாமரைப்பாக்கத்து இறைவனுக்கு வழிபாட்டு வருவாய் நிலமாகப் (ஸ்ரீபலிபோகம்) பெற்றுத் தந்துள்ளான்.

சோழர்களில் கோதண்டராமன் என்ற பெயர் ஆதித்த சோழன் (கி.பி. 871-906) மற்றும் பராந்தக சோழனின் (கி.பி. 907-955) மூத்தமகன் இராஜாதித்தன் ஆகியோருக்கு உண்டு. இங்கு குறிக்கப்படும் கோதண்டராமன் இராஜாதித்தனாக இருக்கலாம்.

Summary : Name of the king is not given. This inscription is engraved in continuation of No : 18 above. Records the registration of land grant at the village Pidarakkilarpundi to the deity of Tamaraippakkam as Sribalibhoga, probably by Kodandaraman, responsing the request made by Mandan Baladevan, working as kanmi to him.

States that the particular lands were originally given as tax free, and taxed in [இறங்கிப் போனப்பின்னை] later stage. The reason for

it is not mentioned. As the inscription seems to be recopied one, it is not possible to find out the period of the inscription on the paleographical ground.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ பிடார[ர்]* கிழா[ர்[* பூண்டி இறங்கி போநபின்னை ஸ்ரீ கோதண்ட ராமர் கந்மி மந்தந் பலதேவன் விண்[ண]*(ப்)

2. ப்பத்தால் இத்தேவர்க்குப் பிடார கிழா[ர்]* பூண்டி ஸ்ரீபலி போகமாக வளயிற் சுற்று மற்று[1] இத்தேவற்க்கு ஸ்ரீபலி போகமாக செய்து குடுத் தேன் மந்தந் பல தே[த]*வனேந் இத்தன்ம மிறக்குவான் ஏழாநரகம் பு(க்)குவான் இத்தன்மம் ரக்ஷிப்பானடி எ[ன்]*றலை மேலந இத்தந்மம் மிறக்குவான் கங்கையிடை குமரியிடை எழுநூற்றுக் காதமாற்றார் செய்த பாவத்தை படுவார்

---

1. 'வளையிற் சுற்று முற்றும்' என்பது க வெட்டு வழக்காகும். ஊரைச்சுற்றி வளைந்த தாக அமைந்த நிலபுலங்கள் என்பது இதன் பொருள்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 4 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10 ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 191/1973-74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 20 |
| மன்னன் : | கோப்பரகேசரி | | |

இடம் : *அக்னீசுவரர் கோயில் கருவறை மற்றும் அர்த்தமண்டப தென்புற ஜகதி.*

குறிப்புரை : *கல்வெட்டு எண் 19ன் இறுதியில் தொடர்ந்து பொறிக்கப்பட்டுள்ளது. தாமரைப்பாக்கத்து இறைவனுக்குத் தாமரைப்பாக்கத்து சரவிலிச்சி மூலத் தாள் என்ற வெள்ளாட்டி அரை நந்தாவிளக்கு எரிப்பதற்கு 6 கழஞ்சு பொன் கொடை தந்த செய்தியை இக்கல்வெட்டுக் கூறுகிறது. கல்வெட்டு படியெடுத்து மீண்டும் 11ஆம் நூற்றாண்டில் வெட்டப்பட்டுள்ளது. ஆதலால் எழுத்தமைதி கொண்டு இக்கல்வெட்டின் காலம் சொல்ல இயலாது. முதலாம் பராந்தகன் தனது 3-வது ஆண்டியாண்டிலேயே மதுரைகொண்ட பரகேசரி என்ற விருதுப்பெயர் பெற்றிருந்தான் என திருகோடிகா கல்வெட்டு(ARE 11/1931) கூறுகிறது. இக்கல்வெட்டில் 4-ம் ஆட்சியாண்டு குறிக்கப்பட்டு 'மதுரை கொண்ட பரகேசரி' என்ற பெயர் காணப்படாதது கவனிக்கத்தக்கது. ஆனால் அக்கல்வெட்டும் படியெடுத்து மீண்டும் வெட்டப்பட்டது ஆகும். பொதுவாக இவ்வூர்க் கல்வெட்டுகளில் பரகேசரியாகிய முதலாம் பராந்தக சோழன் கல்வெட்டுகள் உள்ளதால் இக்கல்வெட்டின் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு ஆக இருக்கலாம்.*

Summary : This inscription is dated in the 4th regnal year of the Chola king Parakesarivarman. Engraved in continuation of No: 19 above. Mentions a gift of six 'kalanju' of gold to burn a half perpetual lamp to the Mahadeva at Tamaraippakkam by Certain charavilichchi Mulaththal, a Vellatti, residing at Tamaraippakkam.

As the inscription seems to be reengraved, it is not possible to fix the date of Parakesarivarman on paleographical ground.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பந்மர்க்கு யாண்டு ச ஆவது[1] பல்குன்ற கோட்டத்து புதநலப்பாடி நாட்டுத் தாமரைப்பாக்கத்து மஹா[ா]* தேவர்க்கு திருநந்தா விளக்கரையிநுக்கு இவ்வூர் இருக்கு[ம்] வெள் ளாட்டி சரவிலிச்சி[யே]*ந்

2. திருக்கோயில் உடையார் வச[த்]*து குடுத்த பொன் சரவிலிச்சி மூலத்த[ா]*(ள்)ளேந்(க்) குடுத்த பொன் அறு கழஞ்சும் கொண்டு சந்திராதித்தியருள்ளளவும் அரைவிளக்கெரிப்பதாநோம் திருக்கோயில் உடையோம் இது பந்மாஏஸ்வர[ர]*க்ஷை இது இறக்குவாந் ஏழாநரக[த்]*து கீழாவாந்.

---

1 'து' வரியின் கீழ் பொறிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 11ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 180/1973-74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 21 |
| மன்னன் : | — | | |

இடம் : அக்னீசுவரர் கோயில் அர்த்தமண்டபத் தென்புற ஜகதி.

குறிப்புரை : கல்வெட்டின் பின்பகுதி சிதைந்துவிட்டது. [16]சாண் கோலால் 2500 குழி கொண்ட ஒரு குறிப்பிட்ட நிலத்தைப் புத்தூரைச் சேர்ந்த செந்தி மாணிக்க . . . . என்ற வியாபாரி தாமரைப்பாக்கத்து இறைவனுக்குக் கொடை கொடுத்ததை இக்கல்வெட்டு குறிப்பதாகத் தெரிகிறது.

Summary : Fragmentary, Records the gift of 2500 (Kuli) of land by (sixteen) span (சாண்) Kol to Tiruvangisvaramudaiya Mahadeva by Sendi Manikkam, a merchant of Puttur.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருவங்கீஸ்வரமுடைய[1] மஹாதேவற்க்கு . . .
2. தியிலே வைத்து தேவர் அநுபவித்து வருகி . . .
3. சாண் கோலால் இரண்டாயிரத்து ஐந்நூறு . . .
4. ணட்டு புத்தூ(ர்)ரிருக்கும் வியாபாரிசெ[ந்தி] மாணிக்கத் . . .

---

1. இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் திருவக்னீஸ்வரமுடைய மகாதேவர் – எனக் குறித்துள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 11-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 22 |
| மன்னன் : | — | | |

இடம் : அக்னீசுவரர் கோயில் அர்த்தமண்டபத் தென்புற ஜகதி

குறிப்புரை : கல்வெட்டின் தொடக்கம் சிதைந்துவிட்டது. விளக்கு ஒன்றுக்காகத் திருவுண்ணாழிகை உடையார்களிடம் 90 ஆடுகள் கொடுக்கப்பட்டதை இது குறிப்பிடுகிறது.

Summary : Beginning of this inscription is lost. Seems to record a gift of 90 sheep for a lamp to the temple. This gift was made in presence of the temple authorities called 'Thiruvunnaligai Udaiyargal'.

**கல்வெட்டு :**

1. றுக்கு திருவுண்ணாழிகை உடையார்கள் வச[ம்]* காட்டிக் கு[டு]*த்த சாவா மூவா பேராடு
2. தொண்ணூறு இ தந்ம[ம்]* பந்மரயேஸ்வர ரக்ஷை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 13ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 186/1973-74 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 23 |
| மன்னன் : | — | | |

இடம் : அக்னீசுவரர் கோயில் முன்மண்டபத் தென்சுவர்.

குறிப்புரை : திருநாவலூரைச் சேர்ந்த வியாபாரி பெருவலம் உடையான் வின்னை வென்றான் என்பவர் உள்மண்டபம் மற்றும் முன்மண்டபங்களுக்கு இடையிலான கட்டடப் பகுதியைச் (அந்தராளப்பத்தி) செய்வித்ததை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

Summary : Name of the king is not mentioned. Refers to the construction of Antarala (a mandapa with side steps) by Peruvalam Udaiyan malaiyan Vinnaivenran, a merchant of Thirunavalur. In characters of about the 13th century. (Refer ARE 187 of Inscription No. 24)

கல்வெட்டு :

1. ஹர: திருணாவலூர் வியாபாரி பெருவ
2. லம் உடையான் ம[ழை]யன் வின்னை
3. ய் வென்றான்னேன் தன்மம் அன்
4. தராள பத்[தி] செ[ய்]*தேன்.

1. கி.பி. 11-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதி என இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் குறிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 10 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1188 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | | |
| மொழி : | தமிழ் | இந்திடக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 189 / 1973-74 |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | (மூன்றாம் குலோத்துங்கன்) | ஊர்க் கல்வெட்டு எண் | 24 |

இடம் : அக்னீசுவரர் கோயில் முன்மண்டபத் தென்புறச் சுவர்

குறிப்புரை : ஆடும் ஆழ்வார், சதுரநடைப் பெருமாள் நிறைதவம் செய்தார் ஆகிய பாடும் பெண்கள் மூவரின் வம்சவழி தடைபட்டதற்காக (சந்தானசாமம் அல்லது சாபம்) சோமநாததேவன் என்பவர் தாமரைப்பாக்கம் கோயிலில் 5 தேவரடியார்களுக்கு 1000குழி நிலம் கொடுத்ததைக் குறிக்கிறது. இம்மூவரும் குறுநிலத் தலைவன் கூத்தாடும்தேவர் பிரிதிகங்கர் என்பவர் இறந்த போது அவருடன் உயிர் நீத்தவர்கள் என்பது கல்வெட்டு எண்கள் 27, 28 ஆகியவற்றால் தெரிய வருகிறது. இடையிடையே சிமெண்ட் பூசப்பட்டு எழுத்துகள் மறைந்துள்ளன.

Summary : This inscription is dated in the 10th regnal year of the Chola king Kulottuga III. Records the gift of 1000 kuli of land to five dancing girls (devaradiyars) as 'santana samam' of three ladies namely Adum Alvar, Chaturanadaipperumal and Niraithavam Cheydal, by certain Somanathadevan. In the inscriptions Nos. 28 & 29 below, these ladies were burried alive, (udan pallikonda) along with the Chief,Kuttadumdevan alias Prithigangan. The term 'santana samam' means stoppage of descendant, as these ladies [singers] were burriedalive.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனசக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழதேவற்கு யாண்டு ௰ வது
2. ஆடும் ஆழ்வாரும் சதுரநடைப் பெருமாளும் நிறைதவஞ்செய்தாரும் சந்தாந சாமத்தில் உ
3. டையார் திருவ[ங்[கீசுர முடையநாயநா]ர்]*க்கு . . [பாடிசையா]க ஐஞ்சு தேவரடியாற்கு பதிநறு
4. சாண் கோலால் ஆயிரங்குழி விட்டேன் சோமநாத தேவனேன் இது விலக்குவாந் கெங்கை இ
5. டைக் குமரி இடைப் பாவங் கொள்வான்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 23 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 1259 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்திடக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 13/1973-74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | பதிப்பு : | — |
| அரசு : | பிற்காலப் பல்லவர் | | |
| மன்னன் : | கோப்பெருஞ்சிங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் | 25 |

இடம் : *அக்னீசுவரர் கோயில் முன்மண்டபந் தென்புறச்சுவரில் நுழைவாயிலின் கீழ்ப் புறம் உள்ளது.*

குறிப்புரை : *தாமரைப்பாக்கத்துக் கோயிலின் மண்டபத்தில் குணமங்கலமுடையான் வடுகன் உய்யக்கொண்டான் பவழமணித் தேவர் என்பவரது மனைவியும் திருப்பேற்றூர் திருவீதிப்பிள்ளை மருந்தாழ்வாரின் மகளுமான பொன்னாட்சி என்பவர் சோபானம் (படிக்கட்டு) செய்தளித்த இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.*

Summary : This inscription is dated in the 23rd regnal year of the later Pallava king Kopperunchinga. Records the construction of steps (Sopanam) to the mandapa of Thiruvangisvaramudaiya nayanar temple at Tamaraippakkam, situated in Pangalanadu, by a lady called Ponnachchiyar, who was the daughter of Thiruveedippillai alias Marundalwar of Tiru pperrur and the wife of Gunamangalamudaiyar Vadugan Uyyakonda Nayanar alias Pavalamanikkathevar.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சகலபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீ
2. கோப்பெருஞ்சிங்க தேவற்கு யாண்டு உ௰௩ ஆவது

3. பங்கள நாட்டுத் தாமரைப்பாக்கத்தில் திருவக்கீசுர

4. ம்முடைய நாயனா[ர்]* திருக்கோயிலுக்கு குணமங்கல மு

5. டையான் வடுகன் உ[ய்]*யக் கொண்ட நாயனாரான பவழ மணி

6. த் தேவர் தேவியார் திருப்பேற்றூரில் இருக்கும் திருவீ

7. திப்பிள்ளையான மருந்தாழ்வார் மகள் பொன்னாச்சியார் செய்

8. வித்த சோபானம்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 10 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1062 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 188/1973-74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 26 |
| மன்னன் : | இரண்டாம் இராசேந்திரன் | | |

இடம் : *அக்னீசுவரர்கோயில் முன்மண்டபத் தென்புறக் குமுதம்*

குறிப்புரை : *ஐயங்கொண்ட சோழமண்டலத்தில் இருந்த 1) பல்குன்றக் கோட்டம் 2) வெண்குன்றக்கோட்டம் 3) ஓய்மாநாடு 4) பனையூர்நாடு 5) திருமுனைப் பாடிநாடு 6) மிலாடான ஜனநாதவளநாடு 7) குடலாடைப்பாடி நாடு 8) பங்களநாடு 9) உத்தமசோழவளநாடு 10) வாணகப்பாடி நாடு ஆகிய பத்து நாடுகளைச் சேர்ந்த உழவர்குடி நாடு அமைப்புகள் ஒன்று கூடி நிறைவேற்றிய தீர்மானத்தை (கச்சவோலை) இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. இம்முடிவுப்படி நஞ்சை நிலத்திற்கு (நீர் நிலம்) வேலி ஒன்றுக்கு 50 கலம் நெல்லும், குறுவை விளைந்த நிலத்திற்கு (கார் விளைந்த நிலம்) வேலி ஒன்றுக்கு 40 கலநெல்லும், புஞ்சைநிலம் வேலி ஒன்றுக்கு 3 காசும் வரியாக அரசு கருவூலத்துக்குச் (பண்டாரம்) செலுத்துவது என்று நிர்ணயிக்கப்பட்டது. இந்த ஆவணத்தைச் சித்திரமேழி நாட்டுப் பட்டன் எழுதியுள்ளான். விவசாயி களின் நாடு அமைப்புகள் பல ஒன்று கூடி நாட்டாண்மை உருவாக்கும் சமூகச் சூழலை இக்கல்வெட்டு காட்டுகிறது.*

Summary : This inscriptions is dated in the 10th regnal year of the Chola king Rajendra II. Records the collective decision taken by the corporate bodies of ten nadus, *i.e.* the agricultural units. The document containing the above decision is mentioned as 'Kaichchavolai'. According to that 50 kalam of paddy was fixed for wet land (nir nilam), 40 kalam for kuruvai and 3 kasu for dryland.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ இரட்டபாடி ஏழரை யிலக்கமுங் கொண்டு பேராற்றங்கரைக் கொப்பத்து ஆகவமல்லனை அஞ்சுவித்தவன் ஆனையுங் குதிரையும் பெண்டிர் பண்டாரமுங்

2. கொண்டு விஜைய அபிஷேகம் பண்ணி வீரசிம்ஹாஸனத்து[1] வீற்றிரு ந்தருளிய கோப்பரகேசரி பந்மரான உடையார் ஸ்ரீராஜேந்த்ரதேவற்கு யாண்டு பத்தாவது ஜயங்கொ[ண்]*ட சோழ மண்டலத்து

3. பல்[2]குன்றக் கோட்டத்தோமும் வெண்குன்றக் கோட்டத்தோமும் ஓய்மா நாட்டோமும் பனையூர் நாட்டோமும் திருமுனைப்பாடி நாட்டோமும் மிலாடான ஜனநாத வளநாட்டோ

4. [மும்] குடலாடைப்பாடி நாட்டோமும் பங்கள நாட்டு நாட்டோமும் உத்தமசோழ வளநாட்டோமும் வாணகப்பாடி நாட்டு நாட்டோமும் எங்களிலிசைந்து நாட்டாண்மை செய்ய இட்ட கைச்ச

5. வோலைப்படி கல்வெட்டும் பரிசாவது நீர்நிலம் விளைந்த நிலத்துக்கு பதினறு சான். கோலால் வேலி ஒன்றுக்கு அருமொழிதேவன் மரக் காலால் ஐம்பதின் கலவரிசை நெல்லு அளப்பதா

6. [க]வும் கார்விளைந்த நிலம் வேலி ஒன்றுக்கு நாற்பதின் கலநெல்லு பண்டாரத்துக்கு அளப்பதாகவும் புஞ்சை விளைந்த நிலம் வேலி ஒன்றுக்கு மூன்று காசு இறுப்பதாகவும் இப்ப

7. [டித்] தண்டுவானும் இறுப்பானும் திருவாணை இவை சித்திரமேழி நாட்டுப் பட்டன் எழுத்து.

---

1. 'த்து' கூட்டெழுத்தாக உள்ளது.
2. 'ல்' வரியின் மேலே வெட்டப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 10 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1188 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 185/1973-74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 27 |
| மன்னன் : | மூன்றாம் குலோத்துங்கன் | | |

இடம் : அக்னீசுவரர் கோயில் முன்மண்டபம் தெற்குச் சுவர் மற்றும் அரைத்தூண்

குறிப்புரை : கூத்தாடும் தேவரான பிருதிகங்கர் இறந்த போது அவரைப் பள்ளிப் படுத்தினர் (புதைத்தனர்). அவருடன் பாடும் பெண்கள் சிலரும் உயிருடன் உடன் பள்ளி கொண்டனர். இவர்களது மனவருத்தம் (மனக்கேதம்) தீர்வதற்காகவும் இவர்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைப் பேறு நின்று போனமைக்காகவும் (சந்தானசாமம்) கூத்தாடும் தேவரது மகன் சோமனான பிருதிகங்கர் இவர்களது வம்சத்தார்க்கு ஒரு வேலி நிலம் கொடுத்துள்ளார். இந்த நிலம் பலதுண்டுகளாக இருந்தது. அத்துண்டு நிலங்கள் பள்ளமுன்னோங்கி, குமிலி, புலையக்கன் கிணற்றின் கீழ்பட்டி, உட்கழனிதடி, சிங்கன் தடி, சேரியான்பட்டி, பொன்னராயன் தண்டில், சஈத்தி, நடுவில் கழுவல் வடதலை என்ற வெவ்வேறு வழக்குப் பெயர்களில் 406, 148 என்று பல்வேறு குழி எண்ணிக்கையில் பரப்பளவுள்ளவையாக இருந்தன. இக்கல்வெட்டில் ஓம்படைக் கிளவி கடுமையான இழிவுச் சொற்களைக் கொண்டுள்ளது. இந்த தர்மத்திற்குக் கேடு செய்தவர்கள் மதுராந்தக வேளான் கால் கழுவிய நீரும் உடல் அல்லது இடுப்புச் (கலை) சேறு (மலம்) உண்டவர்கள் என்று இழிவுபடுவர் என்பது அதன் பொருளாகும்.

Summary : This inscription belongs to the 10th regnal year of the Chola King Kulottunga III. Records the gift of lands, situated in various places, as Santanasamam, by certain Soman alias Prithigangan. The santanasamam grant was made on behalf of two singers (pādum pendir) who were burried alive along with Kuttadumdever, the chief and father of the donar. See also inscription Nos. 24 and 28.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY
ACC NO.
Date
MADRAS-28

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச்சக்ரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ௰வது சோமனான பிருதி
2. கங்கனேன் எங்களையர் கூத்தாடுந்தேவரான பிருதிகங்கர் உடன் பள்ளிகொண்ட பாடும் பெண்
3. டிருக்கும் மனக்கேதம் தீர்த்தமைக்கும் சந்தா[நசா]* மமாக பதினறு சாண் கோலால் விட்டநிலம் ஒருவேலியும் இ
4. வர்கள் வங்கிசமுள்ளதனையும் செல்வதாக விட்ட நிலத்துக்கு நம்வங்கி சத்து இதுக்கு இலங்கனம் சொல்லுவ
5. ரா[1] மதுராந்தக வேளான் கால்கழுவின நீருங் குடிச்சுக் கலைச்சேறும் தின்பாந் கெங்கையிடைக் குமரியிடைச் செய்
6. தார்[1] செய்த பாவங்கள் கொள்வார் பள்ளமுணோங்கி கு சாகூ குமிலி ராசௐஅ புலையக்கள் ராகௗகூ கிணற்றின் கீழ்பட்டி
7. நூறு உட்கழனியில் தடி ௲ சிங்கன் த[டி]* சாஅௐச சேரியான் பட்டி ராகௐ பொன்
8. னரா[1]யந் த
9. ண்டில் அௐ
10. ச சஈத்தி ா
11. அௐஅ நடு
12. வில் கழுவ
13. ல்வடதலை
14. ருௐரு

1. 'ரா' மற்றும் 'ரர்' ஆகியவை கூட்டெழுத்தாக எழுதப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 10 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1188 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 189/1973-74 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 28 |
| மன்னன் : | மூன்றாம் குலோத்துங்கன் | | |

இடம் : அக்னீசுவரர் கோயில் முன்மண்டபக் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : சோமனான பிருதிகங்கர் தன் தந்தை கூத்தாடும் தேவரோடு உயிருடன் பள்ளிகொண்ட (புதைக்கப்பட்ட) ஆடும் ஆழ்வார், சதுர நடைப் பெருமாள் நிறை தவம் செய்தார் ஆகியோருக்கு சந்தான சாமமாகக் கொடுத்த நிலம் 16 சாண் கோலால் அளக்கப்பட்டது என்று குறிப்பிடுவதாகத் தெரிகிறது. (கல்வெட்டு எண் 27 பார்க்க) முன் கல்வெட்டில் இப்பெண்களின் பெயர்கள் சொல்லப்படாததால் இக்கல்வெட்டில் சொல்லப்படுகிறதா? அல்லது இது முற்றுப் பெறாத வேறொரு கல்வெட்டா? என்பது தெரியவில்லை.

Summary : This inscription is dated in the 10th regnal year of the Kulottunga Chola III. Records the gift of 1000 Kuli of land as Santanachamam for three ladies namely Adum Alwar, Chaturanadaipperumal and Niraitavancheydal. These ladies are mentioned as singers in the record No. 27, and were burried along with Kuttadumdevar alias Prithigangar the father of the Soman alias Prithigangan. (Refer inscription No. 24 and 27 also)

கல்வெட்டு :

1. [ஸ்வஸ்தி]ஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ கொலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ¹⁰ வது சோமனான பிருதிகங்க[நேந்]
2. எங்களய்யர் கூத்தாடுந் தேவரான பிருதிகங்கருடன் பள்ளிகொண்ட ஆடும் ஆழ்வார்க்கும், சதுர நடை
3. டப்பெருமாள்க்கும் நிறைதவந் சேதாளுக்கும் சந்தானச் சா[ம]*மாய் விட்ட நிலம் பதினறு சாண் கோல
4. ாலே

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருவண்ணாமலை | ஆட்சி ஆண்டு : | 5 |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1057 |
| ஊர் : | தாமரைப்பாக்கம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 183/1973-74 |
| மொழி : | தமிழ்-சமஸ்கிருதம் | | |
| எழுத்து : | தமிழ்-கிரந்தம் | முன் பதிப்பு : | க. கா. இதழ் எண்-2 பக்கம் 7-11 |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 29 |
| மன்னன் : | இரண்டாம் இராசேந்திரன் | | |

இடம் : அக்னீசுவரர் கோயில் முன்மண்டபக் கிழக்குக் குமுதம்.

குறிப்புரை : கங்கபுரத்திலிருக்கும் வெள்ளாளன் தருப்பேறுடையான் தாழிகோனன் என்பவருக்குச் சங்கரத்தடியான், பெரியான் என்று இரண்டு மகன்கள் இருந்தனர். இவர்களிடையே ஒரு சமயம் வாய்ச்சண்டை (சூடுபடுதல்) ஏற்பட்டது. தம்பியை அண்ணன் கோபப்பட்டு (அரிசப்பட்டு) அடித்தான். தம்பியும் அண்ணனைப் பதிலுக்கு அடித்தபோது அண்ணன் இறந்து போனான். இவர்களின் தந்தை இராசேந்திரசோழச் சித்திரமேழிப் பெருக்காளர் கூடியிருந்த கூட்டத்திற்கு வந்து நிகழ்ந்த நிகழ்வுகளைக் கூறித் தீர்ப்புக் கேட்டார். அன்றைய நெறிமுறைப்படி அண்ணனைக் கொன்ற தம்பியின் உயிரைப் பறிக்கும்படிதான் தீர்ப்பு அமைய வேண்டும். ஆனால் குற்றம் புரிந்தவனின் பெற்றோர்க்கு வேறு பிள்ளைகள் இல்லை. மேலும் அவர்கள் வயது முதிர்ந்தவர்களாக (வயஸ்பரிணதை) இருந்தனர். அவர்களுக்குச் செல்வமும் (அர்த்தம்) இல்லாமலிருந்தது. இவற்றைக் கேட்டு அறிந்து கொண்ட சித்திரமேழிப் பெரியநாட்டார், குற்றம் செய்தவனின் உயிரைப் பறிப்பதால் ஒரு குடி கெட்டுவிடும். முதியோரான பெற்றோரைக் காப்பாற்ற யாரும் இருக்கமாட்டார்கள். எனவே உயிரைப் பறிக்க வேண்டாம் என்று முடிவு செய்து அதற்குப் பதிலாகத் தாமரைப்பாக்கத்துக் கோயிலில் அரை நொந்தாவிளக்கெரிக்கும்படி தண்டனை தந்தனர். இந்த முடிவு பட்டாங்கு ஓலை என்ற பெயரில் தச்சுஊர் பிராமணன் திருவழுதி நாடன் என்பவனால் ஆவணமாக எழுதப்பட்டது. அதில் வெள்ளாளர்கள் பதின்மர் கையொப்பமிட்டனர். சாட்சியாகச் (அறிவேன்) சிலரும் கையொப்பமிட்டனர். இடைக்காலத்தில் இருந்த சமூகநீதியை இக்கல்வெட்டு தெளிவாகக் காட்டுகிறது.

**Summary** : This inscription is dated in the 5th regnal year of the Chola king Rajendra II. Begins with the eulogy of both the king and the guild, of Chitrameli periyanadu. This was an agricultural merchantile guild and named after the king as Rajendra Chola Chitrameli periyanadu. It records the proceedings and judgement of a criminal case which was brought before the guild. Two sons of a Vellala called Tarup- perudaiyan from Gangapuram in Chelurur nadu alias Pudanalappadinadu, quarelled among themselves. The elder brother Sankarattadiyan slapped the younger Periyan, who retaliated and as a result the elder died. This case was brought before the assembly of the guild by the father

The proceedings of enquiry were recorded in the form of questions and answers. From the enquiry the assembly came to know that the aged parents had no other children except these two and did not had any other property also.

In view of the helpless condition the of the aged parents, the assembly decided not to award capital punishment to the accused. Instead, they ordered him to burn half of a perpetual lamp to the temple apart from supporting his aged parents.

The judgement was signed by chitramelinattu Bhattan and witnessed by ten persons of vellala community. The judgement was written by a brahmin Tiruvaluthinatan of Taccuūr.

**கல்வெட்டு :**

1. **ஸ்வஸ்திஸ்ரீ** இலங்கையும் யிரட்டபாடியுங் கொண்டு பேராற்றங்கரைக் கொப்பத்தாஹவமல்லனை பூ[1]றங்கண்டவன் ஆனையுங் குதிரையும் பெண்டிர் பண்டாரமுங் கொண்டு விஜைய[ா] பிஷேகஞ் செய்து ஸிம்ஹாஸனத்து வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி **பன்மரான** உடையார் **ஸ்ரீராஜேந்த்ர தேவர்க்கு** யாண்டு அஞ்சாவது ஸ்ரீ **மத் பூதேவி புத்ராநாம் சாதுர்வண்ண** ஸநோத்பவ **ஸர்வலோக** ஹிதார்த்**தாய சித்ர மேளஸ்ய** ஸாஸ**நம்** ஸ்ரீபூ

2. **மிதேவிக்கு** மக்கள்ளாகி யறம்[வ]ளர புகழ்க்(க) கலி மெலியச் செங்கோலே தெய்வமாகத் திசை யனைத்துஞ் செவிடு படாமைச் சித்திரமேழி **தம்மம்** இனிது நடாத்துகின்ற ஸ்ரீராஜேந்**தர சித்ரமேளிப்** பெருக்காளரோம் பங்கள நாட்டுத் தெற்கில் வகை செளுறூர் நாடான புதநலப்பாடி

நாட்டுக் கங்கபுரத்திருக்கும்[2] வெள்ளா[ள]*ன்(ன்) தருப்பேறுடையான் தாழிகோனன் வந்து என் மகன் சங்கரத்தடியளும்[3] என் மகன் பெரியானும் சூடுபடு(க்)கிறடத்துத்[4] தம்பி

3. யை தமையன் அரிசப்பட்டு அடித்தான் அடிக்க தம்பியும் தமையனை யெதிரேயடித்தான் தம்பிய[டி]*பிச்ச அடியிலே தமையன் பட்டான் என்று வந்து சொல்ல உனக்கு இவ்விருவருமல்ல[ா]*து மக்களுள்ளரோவென்று கேட்க மற்று மக்களாருமில்லை இவர்கள் தாயு நானுமே யுள்ளோ மென்று சொன்னான் சொல்ல அர்த்தந் தானுண்டோவென்று கேட்க அர்த்தமுமில்லை என்றானென்ன ஒரு குடிக்கேடானமையிலும் இவர்களை ரக்ஷிப்பாரிலாமையி

4. லும் அர்த்தம் இலாமை[யி]*லுந் திருத்தாமரைப்பாக்கத்துத்திருவக்நீஸ்வர முடைய மஹாதேவர்க்குத் திருனந்தா விளக்காக அரைவி[ள]*க்கு வைத்து வயஸ்பரிணதை சென்ற தாயையுந் தமப்பனையும் ரக்ஷிப்பானாக தம்ம நோக்க இவனிதற்குப்பட வேண்டா வென்று[4] பெருக்காளர் விதித்தமை யில் இது சுத்தப[ட்]*டிகையாகவும் இது நோக்கிவனுக்கு தேவை புகுந்தாததாக(க)வும் விதித்தோம் பெருக்காளரோம் இதினை அன் றெ[ன்]*று எடுத்துக் க[ா]*ட்டுவான் பெரிய நாட்டுக்குப் பிழைத்தான் இவை சித்திர

5. மேழிநாட்டுப் பட்டனே[ன்]* என்னெழுத்து இப்படியறிவேன் மண்டை குளநாட்டுக் குராப்பாக்கத்து வெள்ளாளன் பிரம்பலூர்கிழவன் கேசன படியன்னேன் இப்படியறிவேன் இலத்தூர்ச் சேக்கிழான் அத்திமல்லன் சீராளன்னேன் இப்படி அறிவேன் தாமரைப்பாக்கிழான் சூற்றி ஆட வல்லான்னேன் இப்படியறிவேன் வயல்லாமூர் வெள்ளாளன் இலங்காடு உடையான் குட்டேறன் பொற்காளியேன் இப்படி அறிவேன் கீரனூர்ச் சாவல்காடாடி மணி கண்டனேன் இப்படி அறிவேன் பாடாநாட்டு

6. கங்க(க)நல்லூர் மாதெட்டன் இருங்கோளனேன் இப்படி அறிவேன் தச்சூழான்பாடி வெள்ளாளன் பாரந்தூர் உடையான் நக்கன் பெரி யானேன் இப்படி அறிவேன் களிக்கொற்றப்பாடி சாத்தமுழான் குற்றே றனேன் இப்படி அறிவேன் சோமாசிபாடி வெள்ளாள[ன்]*தந்தை பிரு திவலி கருமாணிக்கனேன் இப்படி அறிவேன் பரமண்டலத்து பள்ளிகள் நாடு செ[ய்]*வான் சித்திரமேழி னாடு உடையானேன் இவ்வகை பட்

டாங்கு சொல்ல எழுதினேன் தச்சுஊர் ப்ராஹ்மணன் பாரத்வாஜி திரு வழுதிநாடனேன் இவை

7. என்னெழுத்து

---

1 'புறர்கண்டவன்' என்று படிக்கவும்

2. 'க கபுரத்திருக்த ' என்று படிக்கவும்

3. ச கரத்தடி னுடை' என்று படிக்கவும்

4. முன்பதிப்பில் 'தடுபடுக்கிறடத்து' என்று வெளியிடப்பட்டுள்ளது

' ர' பிற்த டுத்து வெட்டப்பட்டு 'வெறுந்' என்றுள்ளது



தாமரைப்பாக்கம் திரு அக்னீசுவரர் கோயில் கருவறை
தென்புற கோட்டம், தட்சிணாமூர்த்தி,
கி.பி. 11-ஆம் நூற்றாண்டு

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY.
MADRAS-28.

# தாமரைப்பாக்கம் கல்வெட்டுகள்

★

பொறுப்பாசிரியர்
கு. தாமோதரன்
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

★

பதிப்பாசிரியர்கள்
முனைவர் சு. இராசகோபால்
முனைவர் ஆ. பத்மாவதி
அர. வசந்தகல்யாணி

★

அச்சிட்டோர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
தரமணி, சென்னை - 600 113
1999

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY ★ MADRAS-28
LIBRARY.
Acc No. ------
Date ------



தாமரைப்பாக்கம் திரு அக்னீசுவரர் கோயில் கருவறை
தென்புற கோட்டம், தட்சிணாமூர்த்தி,
கி.பி. 11-ஆம் நூற்றாண்டு

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY.
MADRAS-28.